Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :226 ஆனி 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 12 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## புத்தளத்தில் பலருக்கு கொரோனா அறிகுறி!

கொழும்பு, ஜூலை 12
புத்தளம் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், அவர்க 22

## திருமணம் செய்யுமாறு தொந்தரவு; காதலன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
நாவாந்துறை கொட்டடிப் பகுதியில் வசிக்கும் 27 வயதுடைய இளைஞர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்தார். திருமணம் செய்துகொள்ளுமாறு காதலி கொடுத்த நச்சரிப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேற்படி இளைஞன் கடந்த சில காலங்களுக்கு முன்னர் வவுனியாவில் உள்ள விடுதி ஒன்றில் பணிபுரிந்துள்ளார். அப்போது அங்கு 23

## லொக் டவுன் அச்சத்தால் கடைகளில் மக்கள் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 12
நாட்டில் நேற்று அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்த நிலையில், நேற்று வடக்கில் பல இடங்களில் 23

## கந்தகாடு பணியாளருக்கும் பிள்ளைகளுக்கும் கொரோனா

### 70 சிறுவர்கள் உட்பட 300 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 12
கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில்பணியாற்றும் ஆலோசகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ள நிலையில், தற்போது 22

## இராணுவ மயமாக்கல் நிலை இலங்கையில் தொடர்கின்றது

### ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கவலை

கொழும்பு, ஜூலை 12
இலங்கையில்நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இராணுவ மயமாக்கல் தொடர்கின்றது. இந்தப் படுமோசமான நிலைமை மிகவும் கவலையளிக்கின்றது இவ்வாறு தெரி 22

# முன்னறிவித்தலின்றி நாட்டை முடக்கோம்

### கொரோனாத் தடுப்புக்கான செயலணி அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 12
'கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத் தொற்றாக மாறினால் பொதுமக்களுக்கு முன்னறிவித்தல்கள் விடுத்தே பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அல்லது நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். எனவே, மக்கள் பதற்றமடையாமல் இருக்க வேண்டும்' இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார். 22

## போதையில் தவறான முடிவெடுத்து ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 12
போதையில் மனைவியுடன் தகாராறில் ஈடுபட்ட 44 வயதுடைய கணவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த சம்பவம் நேற்று 22

## அமிதாப் அபிசேக் பச்சன்களுக்கு கொரோனா

### அச்சத்தில் பிரமுகர்கள்

புதுடெல்லி, ஜூலை 12
பொலிவுட் சினிமாவின் பிரபல மூத்த நடிகரான அமிதாப் பச்சனுக்கும், அவரது மகன் 22

### மக்களே மிக அவதானம்

## உங்கள் பாதுகாப்பு உங்கள் கரங்களில்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 12
'கொரோனா வைரஸ் ஒரு சமூகத் தொற்று நோய். எனவே, அந்த நோயிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் மக்கள் ஒவ்வொருவரும் சுகாதார வழிகாட்டல்க 23

## கந்தகாடு பயிற்றுவிப்பாளருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!

### ஆசிரியையான அவரின் மனைவி உட்பட மாணவர்கள் பலரும் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 12
காலி, ஹபராதுவை பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த தொற்றாளர் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
கந்தகாடு 22

## சமுர்த்தி அலுவலர்கள் தியேட்டருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுமார் 600க்கும் மேற்பட்ட சமுர்த்தி அலுவலர்கள் அமைச்சர் ஒருவரால் 22

### கொரோனா

## இரண்டாவது அலைக்கு அரசே முழுப்பொறுப்பு!!

### சஜித் பிரேமதாஸ விளாசல்

கொழும்பு, ஜூலை 12
இலங்கையில் கொரோனா இரண்டாவது அலை ஏற்படும்பட்சத்தில் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
அக்குரஸ்ஸ பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்று 22




## இராணுவத்திலிருந்து விலகியவரே வாள்வெட்டு சம்பவ சூத்திரதாரி!

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் என்று கருதப்படும் இளைஞர் நேற்று இரவு யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது 23

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ 57,000/-
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
011 200 88 88
செலான் வங்கி

# இந்தியாவில் இருந்து கஞ்சா கடத்தி வந்தவர் வடக்கில் தலைமறைவு

*கொரோனா அச்சத்தால் வலைவீசித் தேடுகிறது எஸ்.ரி.எவ்*

கொழும்பு, ஜூலை 12

இந்தியாவில் இருந்து கஞ்சா கடத்தி வந்த வடமராட்சியைச் சேர்ந்த படகு உரிமையாளர் ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் சிறப்பு அதிரடிப் படையினர் அவரை வலை வீசித் தேடி வருகின்றனர். இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், குறித்த நபர் இந்தியாவில் இருந்து வந்து தலைமறைவாகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி உடுத்துறைக் கடற்கரையில் நேற்று காலை இரு கஞ்சாப் பொதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டன. இரு பொதிகளிலும் 50 கிலோ கஞ்சா இருந்தது. அவற்றைக் கொண்டுவந்தவர்கள் இனங்காணப்படவில்லை. அந்தப் பொதிகளை இந்தியாவில் இருந்து எடுத்துவரப் பயன்படுத்திய படகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் படகின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ளார்.

தற்போது இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று தீவிர நிலையை அடைந்துள்ளது. அதனால் இந்தியாவில் இருந்து களவாகக் கொரோனாத் தொற்றுடன் வருவோரால் இங்கு கொரோனா சமூகத் தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது. தற்போது இந்தியாவில் இருந்து வந்து தலைமறைவாகியுள்ள படகு உரிமையாளரைக் கைது செய்யத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவை என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (எ)

# 13க்கு முடிவு கட்டுவதற்கு மூன்றில் இரண்டு தேவை

*போர்க்குற்றங்கள் நடக்கவே இல்லை அடித்துக் கூறுகின்றார் சரத்வீரசேகர*

கொழும்பு, ஜூலை 12

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டமானது சமஷ்டியை நோக்கி நகர்வதற்கு வழிவகுக்கும். அதனால் 13ஐ இல்லாதொழிக்கவேண்டும். எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்ததும் அதைச் செய்யக்கூடியதாக இருக்கும் இவ்வாறு தெரிவித்தார் பொதுமக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.**

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டு ஆகியன தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை அடிப்படையாகக்கொண்டே ஜெனிவாவில் 30/1 யோசனை முன்வைக்கப்பட்டது.

போர்க்குற்றம், மனித உரிமைமீறல் உட்பட இலங்கைக்கு எதிராக 8 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவை போலியானவையாகும். குறிப்பாக போரின் இறுதிக் காலகட்டத்தில் வடக்குக்கு திட்டமிட்ட அடிப்படையில் உணவுப்பொருள்கள் வழங்கவில்லை, நிறுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டும் அதில் உள்ளடங்குகின்றது. இது அப்பட்டமான பொய்யாகும். மூன்று மாதங்களுக்கு தேவையான பொருள்கள் இருந்தன என்று மாவட்டச் செயலராக இருந்த இமெல்டா சுகுமார் கூறியிருந்தார். அதற்கான சாட்சியும் இருந்தது.

ஆனால், குற்றச்சாட்டுகளை ஏற்கும் வகையில் மங்கள சமரவீர ஜெனிவாவில் செயற்பட்டார். பரணகம குழுவுக்கு, சர்வதேச போர்க்குற்ற நிபுணர்கள் அறுவர் அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தனர். நாம் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என எழுதியிருந்தனர். இப்படியான அறிக்கைகள் இருந்தும் ஜெனிவாவில், போர்க்குற்றங்களை ஏற்கும் வகையில் மங்கள சமரவீர இணை அனுசரணை வழங்கினார். இதனால்தான் இலங்கைக்கு சார்பாக செயற்படும் நாடுகளுக்குக்கூட மௌனம் காக்கவேண்டியேற்பட்டது. நாம் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை.

அதேவேளை, நாடுமீது துளியளவு பற்று இருப்பவர்கள்கூட, 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என கூறமாட்டார்கள். கடந்த 2 ஆயிரத்து 500 வருடங்களில் நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக எமது மூதாதையர்கள் உயிர் தியாகம்கூட செய்துள்ளனர். 13 என்பது எமக்கு இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒன்றாகும். இதன்மூலம் நாடு கிட்டத்தட்ட சமஷ்டிக்கு உட்படுத்தப்பட்டது. ஜனாதிபதியிடம் நிறைவேற்று அதிகாரம் இருப்பதாலேயே சமஷ்டி முறைமை உருவாவதை தடுக்கக் கூடியதாக இருக்கின்றது.

13 இன் பிரகாரம் காணி அதிகாரம் முதலமைச்சரின்கீழ்தான் வரும். தொல்லியல் விடயதானங்களும் அவரின் கீழ் வந்துவிடும். அதேபோல் பிரதி பொலிஸ்மா அதிபரும் முதல்வரின் கீழ் வந்துவிடுவார். அப்படியானால் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் சமஷ்டி முறைமை உருவாகிவிடும். அதனால் 13 நிச்சயம் இல்லாதொழிக்கப்படவேண்டும். அது வெள்ளை யானை என்பது உறுதியாகிவிட்டது.

நாட்டு மக்கள் எமக்கு நிச்சயம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை வழங்குவார்கள் என நம்புகின்றோம். ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் எமது கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர். 19, 13 ஆகிய விடயங்களை திருத்தியமைப்பதற்கே எமக்கு மூன்றிலிரண்டு பலம் தேவை. அவ்வாறு கிடைக்கும் பலத்தை ஜனாதிபதி ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தமாட்டார்- என்றார். (எ-44)

# தனிமைப்படுத்தலில் இருந்த 170பேர் வீடுசெல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் பலாலி விமானப் படை முகாமில் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து நேற்று 100 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வந்த இவர்கள் 14 நாள் தனிமைப்படுத்தலுக்காக இந்த மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவர்களில் எவருக்கும் தொற்று இல்லாத நிலையில் தனிமைப்படுத்தல் காலத்தின் பின்னர் அவர்கள் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, இயங்கச்சி தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து 71 பேர் இன்று வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். லெபனானுக்குப் பணிப் பெண்களாகச் சென்றிருந்த இவர்கள், அண்மையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அவர்கள் இயக்கச்சியில் 55ஆவது படைப் பிரிவில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் கடந்த 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்படிருந்தது.

அவர்களுக்குரிய தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்திருந்த நிலையில் அவர்கள் நேற்று வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று மாதிரி வாக்களிப்பு நடைபெற்றது. மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலக வளாகத்தில் வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, வாக்களிப்பு நடைபெற்றது. (எ)

# கந்தகாட்டிலிருந்து தப்பியோடிய இருவர் கைது

கொழும்பு, ஜூலை 12


கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்களைக் கைது செய்துள்ள வத்தளைப் பொலிஸார், அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்காக வெலிசர மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். இவர்கள் வத்தளை ஹேகித்த மற்றும் மாபொல முத்துராஜ மாவத்தையைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட பின்னர் அவர்களுடன் பழகியவர்கள், தொடர்பில் இருந்தவர்கள் கடும் அச்சத்தில் இருப்பதாக தெரியவந்துள்ளது. வத்தளை பொலிஸார் மற்றும் வத்தளை சுகாதார அதிகாரிகள் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சரவணை சேவா மன்ற பொதுக்கூட்டம் இன்று!!

யாழ்ப்பாணம், ஜூலை 12

சரவணை சேவா மன்றப் பொதுக்கூட்டம் சரவணை தபாற்கந்தோருக்கு அருகில் உள்ள மணிமண்டபத்தில் தலைவர் கு.கணேசலிங்கம் தலைமையில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி இந்தப் பொதுக்கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. எனினும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக அது பிற்போடப்பட்டிருந்தது. (ம)



## ஜனாதிபதி செயலணியின் நோக்கம் வெளிப்பட்டது!

### முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 12
தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி எதற்காக நியமிக்கப்பட்டுள்ளதென கூறாமல் கூறிவிட்டார் மரியாதைக்குரிய மேதானந்த தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான க.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் மற்றும் முஸ்லீம் சரித்திரவியலாளர்களைக் கொண்டிராத குறித்த செயலணி பெரும்பான்மையர் தமிழ் மொழியைப்பேசும் கிழக்கு மாகாணத்திற்கு எதற்காக நியமிக்கப்பட்டுள்ளது என்றால் கிழக்கை சிங்கள பௌத்தமாநிலம் என்று அடையாளம் காட்டவே என்பது தேரரின் கூற்றிலிருந்து புலனாகின்றது.

சபுமல் குமாரயா என்ற சிங்கள இளவரசர் என்று செண்பகப் பெருமாள் என்ற தமிழரை அழைக்கின்றார் எமது தொல்லியலாள தேரர். செண்பகப் பெருமாள் என்பவர் தமிழர். செண்பகப் பெருமாள் என்ற கிழக்கிலங்கைத் தமிழ் மகனின் தந்தையான மாணிக்கத் தலைவன் என்ற கரையார் குலத் தலைவன் இறந்த பின் ஆறாம் பராக்கிரமபாகுவால் செண்பகப் பெருமாள் தத்தெடுக்கப்பட்டான். அந்தத் தமிழ் மகனின் பெயரே சபுமல்குமாரயா என்று மாற்றப்பட்டது. அக் காலகட்டத்தில் இப்போதுபோல் தமிழ் சிங்கள உறவுகள் கூர்மை அடைந்திருந்திருக்கவில்லை.

ஆகவே குறித்த தமிழ் மகனை சிங்கள இளவரசர் என்று தேரரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளமை பிழையான தகவலைத் தருவதாய் உள்ளது. உண்மையை மறைத்து ஏதோ சிங்களவர் ஒருவர் சென்று நல்லூரை ஆண்டார் என்று சிங்களவர் புராணத்தைப் பாடவேண்டிய அவசியம் என்ன? இது சிங்கள மக்களை ஏமாற்றும் ஒரு கபட நாடகம் அல்லவா? அடுத்துதேரர் திருக்கோணேஸ்வரம் பற்றிப் பிழையான தகவல்களைப் பரப்பப் பார்க்கின்றார்.

இவரின் இந்த இரு கூற்றுகளில் இருந்தே ஜனாதிபதி செயலணியின் கரவான எண்ணங்கள் வெளிவந்துள்ளன. மதிப்புக்குரிய தேரர் போன்ற மதிகெட்டவர்களே இந்தச் செயலணியில் இருந்து இராணுவ உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றப் போகின்றார்கள் என்று தெரிகின்றது. அவர்களின் சூழ்ச்சி பலித்தால் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்று பெயர் பெற்றுவிடும் அதைப் பின்னர் வந்த தமிழர்கள் ஆக்கிரமித்தார்கள் என்ற பொய்யான கூற்றை உலகம் பூராகவும் ஏற்றுக் கொள்ளச் செய்துவிடுவார்கள். எமது தமிழ் சரித்திர மற்றும் தொல்லியல் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் உண்மையை உரக்கக் கூறவேண்டும் என்றுள்ளது. (ம)

# இராவணன் எனும் மாயை

### எந்தவொரு சான்றும் இல்லை என்கிறது தொல்பொருள் திணைக்களம்

கொழும்பு, ஜூலை 12
இராவணன் இராஜ்ஜியம் எனக் கூறப்படுவது எல்லாம் கற்பனைக் கதையாகும். இராவணன் வாழ்ந்ததற்கான எந்தவொரு தொல்லியல் சான்றுகளும் கிடைக்கவில்லை என்று தொல்பொருளியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இராவணன் தொடர்பான கதையானது இலங்கைக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றாகும். அவ்வாறு இல்லை என்பதை பலர் ஏற்பதில்லை. எனவே, தவறானதொரு இதிகாசத்தை சமூகமயப்படுத்த முடியாது. அதனால்தான் இராவணன் தொடர்பான விடயத்தை நிராகரிக்கின்றேன். அதற்கு பல காரணங்களும் உள்ளன.

இராமாயணம் என்பது வீரகாவியமாகும். அதில் எதிரியை எந்தளவுக்கு பலம்பொருந்தியவராக காட்டமுடியுமோ, அந்தளவுக்கு விபரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சினிமாப்படத்தில் வில்லனை பலமானவராக காண்பிப்பார்கள். இறுதியில் நடிகர் தனியாக சென்று நூறுபேரை அடக்குவார். இவ்வாறுதான் வீரகாவியத்திலும் இராவணனை பலம்பொருந்தியவராக காண்பித்துள்ளனர்.

இரு தரப்பிலும் உயிரிழப்புகள் இடம்பெறக்கூடும் என்பதால் இரண்டு தடவைகள் ராமர் யுத்தத்தை நிராகரித்தார் என்றும், இராவணன் அதனை சவாலுக்குட்படுத்தியதாலேயே போர் இடம்பெற்றது எனவும் கூறப்படுகின்றது.

அனுமான் பாலம் அமைத்து வந்தார் என்றும், இராவணனிடம் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்கள் உட்பட மேலும் பல சாதனங்கள் இருந்தன எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் கிரகங்களைக் கூட இராவணன் பிடித்தார் என நம்பப்படுகின்றது.

அவரிடம் இவ்வளவு சாதனங்கள், பலம் இருந்ததெனில், அனுமான் பாலம் அமைத்துவந்து, வாலால் தீமூட்டும்வரை அதனை ஏன் தடுக்கமுடியாமல்போனது?.

நாட்டிலுள்ள தொல்பொருள்களில் அரைவாசிக்கும்மேல் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதுவரையில் இராவணன் தொடர்பில் எமக்கு எந்தவொரு சாட்சியும் கிடைக்கவில்லை. குறிப்பாக இராவணனுக்குத் தொடர்புடையது எனக்கூறப்படும் இடங்களில்கூட எந்தப் பொருளும் கிடைக்கவில்லை. நாட்டு மக்கள் நாளாந்தம் கிணறு வெட்டுகின்றனர். விவசாயம் செய்கின்றனர். அவர்களுக்குக்கூட எந்தவொரு சான்றும் கிடைக்கவில்லை- என்றார். (ஏ-44)

## வாள் உடமையில் வைத்திருந்தனரென சந்தேக நபர்கள் இருவர் கைதாகினர்!

தருமபுரம் பகுதியில் உடமையில் வாள் வைத்திருந்த இருவர் சிறப்பு அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டனர்.

தருமபுரம் பகுதியால் மோட்டார் சைக்கிளில் வாள் கொண்டுசென்றதை அடுத்தே அவர்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கடந்த இருதினங்களுக்கு முன்னரும் குறித்த பகுதியில் ஒருவர் வாளுடன் கைது செய்யப்பட்டார். மூவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். மூவரையும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-6)




சபையில்
சரவணபவன்

வடபகுதி, மயிலிட்டி, நெடுந்தீவு, மன்னார், முல்லைத்தீவு எனப் பல்வேறு மீன்பிடி மையங்களைக் கொண்ட பகுதியாகும். ஒரு காலத்தில் மயிலிட்டி மீன்லொறி போனால்தான் கொழும்பு புறக்கோட்டை மீன்சந்தை விழிப்படையும் என்று சொல்லுமளவுக்கு இலங்கையின் கடலுணவுத் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை வடபகுதி நிறைவு செய்தது.
போர்க் காலத்தில் கடலில் கடற்படையினரால் மீனவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகள் , அச்சுறுத்தல்கள் காரணமாகவும் போக்குவரத்துகளில் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் காரணமாகவும் அந்தநிலை இல்லாமல் செய்யப்பட்டது. ஆனால் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 10 வருடங்களாகிவிட்ட போதிலும் அன்றைய நிலைமை மீண்டும் ஏற்படவில்லை என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவரவிரும்புகிறேன்.
ஒன்று முந்திய மீன்பிடி மையங்கள் இன்றும் கடற்படை வசமே உள்ளன. விடுவிக்கப்பட்ட இடங்களில் கூட அங்கு போய் குடியிருந்து தங்கள் தொழிலை மீனவர்கள் மேற்கொள்ளும் வகையில் வசதிகள் செய்யப்படவில்லை. இராணுவத்தினராலும் கடற்படையினராலும் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் களையப்படவில்லை.
அடுத்தது- தென்னிலங்கையில் மீனவர்களின் ஆக்கிரமிப்பும் அவர்கள் கடற்படையினர், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் மறைமுக ஆதரவுடன் மேற்கொண்டு வரும் சட்டவிரோத மீன்பிடி முறைகளுமாகும்.

– மார்ச் 2019



4
X

# கொரோனா 2ஆம் அலையால் தேர்தலுக்குப் பாதிப்பில்லை

## முன்னாள் எம்.பி. காமினி லொக்குகே கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 12

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும், மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள கொவிட்19 தாக்கத்தால் பொதுத் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் முறையற்ற அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் விதமாகக் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கிறார். ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு இவருக்கு எவ்வித தகுதியும் கிடையாது. கடந்த அரசாங்கத்தில் வீழ்ச்சி யடைந்துள்ள பொருளாதாரத்தையே கோத்தாபய ராஜபக் ஷ பொறுப்பேற்றார்.

கடந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள், இறக்குமதி பொருளாதாரத்துக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுத்தது. இதன் காரணமாக தேசிய உற்பத்திகள் இல்லாதொழிக்கப்பட்டன. பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் -19 வைரஸ்' வீழ்ச்சி யடைந்துள்ள பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தியது. பொருளாதாரத்தை வலுப்படுத்துவற்கான நடவடிக்கை துறைசார் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் புதிதாக தற்போது அடையாளம்காணப்பட்டுள்ளார்கள். இதனைக் கட்டுப்படுத்தஉறுதிப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எக்காரணிகளுக்காகவும் தேர்தல் பிற் போடப்படமாட்டாது - என்றார். (ப)




# சூழ்நிலைக் கைதிகளாக சிறுபான்மைக் கட்சிகள்

## சஜித் அணி வேட்பாளர் ஜனகன்

கொழும்பு, ஜூலை 12

தேர்தல் பிரசாரங்களில் பெரும்பான்மைக் கட்சிகள் இனவாதத்தைப் பிரதான காரணியாகக் கையிலெடுப்பதால், சிறுபான்மைக் கட்சிகள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்காக சூழ்நிலைக் கைதிகளாகிவிடுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

கொழும்பு வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எல்லாவெலதேரரால்திருகோணேஸ்வரம் கோணக்க விகாரை என்று கூறப்பட்டமை தொல்பொருள் திணைக்களத்தில் தமிழ் , முஸ்லிம் பிரதிநிதித்துவம் இன்மையின் விளைவாகும். தற்போது அந்தப் பட்டியலில் நல்லூர் கோவிலும் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பாண்மையினர் பௌத்தர்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதன் காரணமாக அரசமைப்பில்கூறப்பட்டுள்ளமைக்கு ஏற்ப பௌத்தர்களுக்கு முக்கியத்துவும் வழங்கப்படுகிறது. அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் இலங்கைப் பிரஜைகளே. எனவே அவர்களும் புறக்கணிக்கப்படாது மதிக்கப்பட வேண்டும். தற்போது தேர்தல் காலம் என்பதால் தமிழ்த் தலைமைகள் இது குறித்து கருத்துக்கள் எதுவும் கூறாமலிருக்கலாம். ஆனால் தற்போது நாம் அனைவரும் அமைதியாக இருந்து விட்டால் தேரர் கூறுவது உண்மை என்றாகிவிடும். இவர்களால் இவ்வாறான கருத்துக்கள் கூறப்பட்டாலும் பௌத்த மக்கள் இவை பற்றி நன்றாகப் புரிந்து வைத்திருக்கின்றனர். இந்நிலையில் நாட்டில் காணப்படும் சுமுகமானதொரு நிலைமையை குழப்புவதற்கே இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரே இனவாத செயற்பாடுகளை முதலில் ஆரம்பித்தனர். பெரும்பான்மைக் கட்சிகள் தேர்தல் பிரசாரத்தின் போது இனவாதத்தைப் பிரதான கருப்பொருளாக கையிலெடுக்கும் போது சிறுபான்மைக் கட்சிகள் இயல்பாகவே அதற்குள் தள்ளப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுபான்மைக் கட்சிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சூழ்நிலைக்கைதிகளாகி விடுகின்றன. இவை அனைத்திற்கும் உரிய தீர்வு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதாகும் - என்றார். (ப)

# மஹிந்த, ரணிலுக்கு வயதாகிவிட்டது

## அவர்களால் பயனில்லை என்கிறது சஜித் அணி

கொழும்பு, ஜூலை 12

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருமே தோல்வியடைந்த தலைவர்கள். வயது முதிர்ந்த இவ்விருவரையும் மீண்டும் தெரிவு செய்வதில் எவ்வித பயனுமில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மஹிந்த ராஜபக் ஷவின் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவரது மகனே தெரிவித்துள்ளார். இந்நிலையில் தொடர்ந்தும் அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கொள்வதற்காக போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் மோசடிக்காரர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார். ரணில் , மஹிந்த ஆகியோரின் வயது எழுவதையும் தாண்டி விட்டது. இந்தநிலையில் இவர்களையே மீண்டும் தெரிவு செய்வதால் நாட்டுக்கு எந்தவித பயன்தரும் செயற்பாடுகளும் இடம்பெறப்போவதில்லை. இவர்களிருவருமே சித்தியடையாத தலைவர்கள். சஜித் பிரேமதாசவே இம்முறை சித்தியடைந்த தலைவராகக் காணப்படுகின்றார். 53 வயதுடைய அவருக்கு 58 வரையில் மக்கள் ஆட்சிப் பொறுப்பை பெற்றுக் கொடுத்துப் பார்க்கலாம். அவரது செயற்பாடுகள் தொடர்பில் திருப்தி ஏற்படாவிட்டால் அவரை நிராகரிக்கலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருமே மோசடிக் காரர்கள் என்று மக்கள் விமர்சித்து வருகின்றனர். இவர்களை நாங்கள் தெரிவு செய்வதில்லை மக்கள் தான் தெரிவு செய்கின்றனர். எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும், அந்தக் கட்சியில் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத , சிறந்த செயற்திறன் மிக்க உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியில் சிறந்த செயற்றிறன் மிக்க திறமையான உறுப்பினர்களே இம்முறை களமிறங்கியுள்ளனர் - என்றார். (ப)

# இராணுவத்தால் மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்

## சவேந்திர சில்வா இ.போ.ச. பஸ்ஸில் வந்தால் தெரியும் என்கிறார் சார்ள்ஸ்

வவுனியா,ஜூலை 12

இராணுவத்தால் மக்கள் வஞ்சிக்கப் படுகின்றனர். இராணுவத்தளபதி சவேந்திரசில்வா இ.போ.ச. பஸ்ஸில் வந்தால் அது தெரியும் என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் தமிழர்களுடைய இனவிகிதாசாரத்தினை தமிழர்களது இருப்பை இல்லாதொழிப்பதற்காகப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு அந்த முயற்சியின் அடிப்படையில் மகாவலி அதிகாரசபை. வன இலாகா சபை , வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என நான்கு திணைக்களங்களும் நேரடியாக மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டு தமிழர்களின் நிலங்களை அபகரித்து வருகின்றன. அந்த நிலங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி அதன் மூலமாகத் தமிழர்களின் இனவிகிதாசாரத்தை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. 2009 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு அதிகமாக எங்களுடைய பிரதேசத்தில் மகாவலி மூலம் சிங்களக் குடி யேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை வைத்து தமிழ் வாக்குகளைப் பிரித்து ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்கள் திட்டமிடுகின்றனர். ஓர் இராணுவ அதிகாரி இங்கு வேட்பாளராக நிற்கின்றார். நாளை பிரதேச செயலாளரும் இராணுவ அதிகாரியாக வரலாம். இது எமது மக்களுக்குள்ள அச்சுறுத்தலாகும். இராணுவத் தளபதியாக இருக்கின்ற சவேந்திரசில்வா வடக்கில் இராணுவத்தினரால் இடையூறு இல்லை என்றும் சுமுகமான நிலை உள்ளதாகவும் அரசியல்வாதிகளே பொய்ப்பிரசாரம்செய்கின்றனர்எனவும் கூறுகின்றார். மாங்குளத்திலிருந்து வவுனியா வரையிலும் 5 சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. எனவே சவேந்திரசில்வா இ.போ.ச. பஸ்ஸில் வரவேண்டும். அதுவும் இராணுவ உடை இல்லாமல் மக்களாக அவர் வரவேண்டும். அப்போதுதான் அவருக்குத் தெரியும் இராணுவத்தால் எந்தளவில் மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர் என்பது - என்றார். (ப-110)

# மே 18 பேரவலத்துக்கு கூட்டமைப்பே பொறுப்பு

## சு.க. வேட்பாளர் வரதராஜசிங்கம் குற்றச்சாட்டு

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மனிதப் பேரவலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்பேற்கவேண்டுமென ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் தேர்தல் தொகுதி வேட்பாளர் ப. வரதராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்ற போரால் பல உயிர்ச் சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட்டமையை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. அக்காலப் பகுதியில் தமிழர்களுக்குத் தீர்மானம் பெற்றுத் தருகிறோம் எனக் கூறி நாடாளுமன்ற ஆசனங்களை அலங்கரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் தலைமறைவாகினர். வாக்களித்த மக்கள் நடுத்தெருவில் யாருமற்ற அநாதைகளாக நின்றபோது இவர்கள் தமது குடும்பங்களுடன் உல்லாசமான வாழ்க்கை வாழ்ந்தமையைப் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தமிழனும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழினத்தைக் காப்பாற்றப் போகிறோம், தீர்வைப் பெற்றுத்தரப்போகிறோம் என பொங்கலுக்கும் தீபாவளிக்கும் கோஷமிடும் கூட்டமைப்பு இதுவரை எதையாவது ஒன்றைச் செய்ததா?. தேர்தல் காலங்களில் ஆபத்து வரப்போகிறது என அபாயச் சங்கு ஊதும் கூட்டமைப்பு தேர்தல் முடிந்ததும் வாயடைத்துப் போன மௌனிகளாக ஆகின்றனர் - என்றார். (ப-159)

# ராஜபக்ஷவினர் ஆட்சிக்கு வந்தால் ராணுவமே அரசமைப்பையும் தயாரிக்கும்

## நிச்சயம் இது நடக்கும் என்கிறார் சரவணபவன்

**யாழ்ப்பாணம், ஜூலை 12**

**ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசமைப்பையும் இராணுவமே தயாரிக்கும். அத்துடன் நிலையான இராணுவ ஆட்சி உருவாக்கப்படும் என்பது உறுதி. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.**

இவ்வாறு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்ற தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். கோப்பாயில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மாற்று அணியைச் சேர்ந்த அதிருப்தியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் தொடர்ந்து பேசிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேலும் குறிப்பிட்டதாவது:

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் பெரும் அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது.

சாதாரண பொதுமக்கள் மட்டுமல்ல உதவித் தேர்தல் ஆணையாளர் கூட இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார். எமது பிரதேசம் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்து உயர் நிர்வாக மட்டத்திலும் பொறுப்பாளர்களாகவும் செயலாளர்களாகவும் இராணுவத்தினரே பதவிகளை அலங்கரிக்கின்றனர். அனைத்து அதிகாரங்களையும் கொண்ட நாடாளுமன்றத்தை ஓரம்கட்டிவிட்டு கோத்தாபய சர்வாதிகாரமாகவும் தன்னிச்சையாகவும் செயற்படுகின்றார்.

ஜனாதிபதி மீண்டும் தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே 19ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் எனத் துடித்துக் கொண்டிருக்கிறார். துரதிர்ஷ்ட வசமாக அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் இராணுவ ஆட்சி ஏற்படுவது உறுதி. அதற்கான அர சமைப்பையும் இராணுவத்தினரே உருவாக்குவார்கள் அதில் சந்தேகம் இல்லை.

இப்படியான ஒரு சூழல் உருவாகிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. இந்த அபாயகரமான யதார்த்தத்தைத் தெரிந்தும் தெரியாதவர்கள் போல் கோத்தாவின் கைகூலிகளாகவும் ஏஜண்டுகளாகவும் எம்மவர்களில் சிலர் செயற்பட்டு வருகின்றனர். இன்று உங்கள் மீது பற்றும் பாசமும் கொண்டவர்கள் போல் பாசாங்கு செய்து வாக்கு கேட்பவர்கள் தப்பித் தவறி ஒருவரோ இருவரோ வந்து விட்டால் அவர்கள் கோடிகளுக்கு விலைபோய் கோத்தாபயவுக்கு கொடி பிடிப்பவர்களாக மாறிவிடுவார்கள். எலும்புத் துண்டுபோல் தூக்கி வீசப்படும். அமைச்சுப் பதவிகளுக்காக நம்மை எல்லாம் காட்டிக் கொடுத்து விடுவார்கள் என்பது உறுதி. இவற்றை கவனத்தில் கொண்டு நமது தாயகப் பிரதேசத்தில் கௌரவமாக வாழ தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கே வாக்களிக்க வேண்டும் - என்றார். (எ)

## மின் வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 12

யானைகள் வருவதைத் தடுப்பதற்காக இடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மெதிரிகிரிய சமகிபுர புதிய நகரப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



Make the Right Move

We are part of ISF Group of companies established in 1975.

We have established an Organic Moringa Plantation with Modern Agricultural Practices to produce high quality Moringa Leaves to manufacture Moringa Powder in Tablets and Capsules in a state of the art Food Processing Factory being commissioned in Iyakachchi, Northern Sri Lanka.

We seek dedicated young energetic individuals who are willing to take new challenges who are result oriented with good communication skills.

FARM MANAGER

With a Degree or Diploma in Agriculture and experience in managing Farms.

Minimum experience required is 5 years in similar position.

Ability to lead, motivate and work closely with Farm workforce adhering to the Modern Agricultural Practices.

Experience in managing Farms with Organic certification; HACCP, ISO and GMP will complete our requirement.

FARM SUPERVISOR

NVQ Level 4 qualification with 2-3 years working experience or 5-8 years of working experience in the same position.

REMUNERATION:
A remuneration package in line with the industrial standards and work experience will be offered to the selected candidates. Applicants residing in close proximity to Iyakachchi will be given preference.

Please forward your detailed Curriculum Vitae to below mail address.

HERITAGE

mdheritagepremierfoods@gmail.com
Managing Director
HERITAGE PREMIER FOODS (PRIVATE) LIMITED
¾, Rockwood Place
Colombo 07.



# ஐ.தே.கவை பிளவுபடுத்தி பெரும்பான்மையை பெற முயற்சி

## அதன் கம்பஹா மாவட்ட வேட்பாளர் குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவு படுத்திவிட்டு 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதென ஐக்கியக் தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐ.தே.கவை இரண்டாகப் பிரித்துவிட்டு , 2/3 பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது. கட்சி பிரிந்து விட்டாலும் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளை எவராலும் புறக்கணிக்க முடியாது. மற்றைய கட்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பெறுமதியை அறிந்து கொள்ள முடியும். அந்தக் கட்சியைப் பாதுகாப்பதற்கான சந்தர்ப்பம் வந்துள்ளது - என்றார். (ப)

# பௌத்தமயமாக்கலுக்கு முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

தமிழர்களின் வரலாற்றுத் தலங்களை ஆக்கிரமித்து பௌத்தமயமாக்கும், சதித் திட்டத்தை தமிழ்த் தேசியமக்கள் முன்னணி கண்டிப்பதாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணண் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காஅரசாங்கம் தமிழர்களின் கலை, கலாசார பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை ஆக்கிரமிப்பது மட்டுமல்லாது அதனை அழித்தொழிக்கின்ற திட்டமிட்ட வேலைகளையே தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. அரசின் இத்தகைய இனவாதச் செயற்பாடுகளுக்கு பௌத்த பேரினவாதிகள் தொடர்ந்தும் ஆதரவை வழங்கி வருகின்றனர். ஏனெனில் சிங்கள அரசுகளும் அதே பேரினவாதச் சிந்தனையுடன் தான் தொடர்ந்தும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆகவே சிங்களப் பேரின வாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்ற எமது தேசத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு எமது தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வொன்று எமக்குக் கிடைக்கவேண்டும். அதற்காகவே தொடர்ந்தும் நாம் செயற்பட்டு வருகின்றோம். குறிப்பாக அண்மையில் கூட திருக்கோணேச்சரம் மற்றும் நல்லூர் ஆகிய தமிழ் மக்களின் வரலாற்றுத் தலங்களை தமிழ் மக்களுக்குச் சொந்தமில்லை என்றும் அது சிங்கள மக்களுக்கே சொந்தமென்றும் புதுக் கதைவிட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறாக தமிழ் மக்களின் வரலாற்றுத் தளங்களை அழிப்பது மட்டுமல்லாது அதனை ஆக்கிரமிக்கும் கைங்கரியத்தைத் திட்டமிட்ட வகையில் பேரினவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களது இவ்வாறான கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றார். (ப-20)

www.northshore.lk

Your gateway to
QUALITY HIGHER EDUCATION




FOUNDATION PROGRAMMES
leading to BRITISH DEGREES

ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்வோருக்கு பதிவுக் கட்டணத்தில் 50% கழிவு வழங்கப்படும்.

REGISTRATIONS now open for JULY INTAKE

Health Sciences
- BSc (Hons) Biotechnology
- BSc (Hons) Biomedical Science
- BSc (Hons) Psychology
- BSc (Hons) Forensic Sciences
- BSc (Hons) Cosmetic Sciences
- BSc (Hons) Pharmaceutical Science
- BSc (Hons) Public Health
- BSc (Hons) Biochemistry

Business Management
- BA(Hons) Business with International Business Management
- BSc(Hons) Business Management
- BA (Hons) in Early Childhood Studies

Engineering
- BEng / MEng Mechatronics and Autonomous Systems
- BEng / MEng Civil Engineering
- BEng / MEng Electrical and Electronics
- BEng / MEng Mechanical Engineering
- BEng / MEng Control and Automation

Computer Sciences
- BSc (Hons) Computer Networks
- BSc (Hons) Software Engneering
- BSc (Hons) Data Science
- BSc (Hons) Computer Science
- BSc (Hons) Multimedia Computing
- BSc (Hons) Computer Games Development

ENTRY REQUIREMENTS
Successful completion of local or London O/Ls

படைவீரர்கள், பொலிஸ் மற்றும் அரசாங்க சுகாதாரத்துறைசார் நிபுணத்துவ அங்கத்தவர்களுக்கு பாடநெறிக் கட்டணத்தில் 25% புலமைப்பரிசில்

Hot Line : 0715 500 200

T&C apply. No combined offers and single redemption only.

NORTHSHORE INTERNATIONAL CAMPUS
141, church Road, Colombo 15.
Tel : +94 11 599 00 00
Email : info@northshore.edu.lk
Northshorelk

# பெரமுனவில் கழுதைகளும் களத்தில்!

## பெண் வேட்பாளர் சுட்டிக்காட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் நாடாளுமன்றத்துக்கு தகுதியில்லாத சிலர் வேட்பாளர்களாக உள்ளனர் என்று அந்தக் கட்சியின் பெண் வேட்பாளரான ஒஷாடி ஹேவமத்தும குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவரது முகப் புத்தகக் கணக்கில் இட்டுள்ள பதிவில் மேலும் உள்ளதாவது;

புத்திசாலித்தனமாக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்காது போனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சந்தித்த அதே பிரச்சினையை தற்போதைய ஜனாதிபதி கோத்தாபயவும் சந்திப்பார். ஏற்கனவே குறித்த பிரச்சினையை மைத்திரிபால சிறிசேனவினாலும், ரணில் விக்கிரமசிங்கவினா லும் தீர்க்க முடியாமல் போனது. இந்த நிலையில் பொதுஜன முன்னணி தமது வேட்பாளர் பட்டியல்களில் கழுதைகளை யும், குதிரைகளையும் இணைந்துள்ளது. இதன்போது வாக்காளர்கள் குதிரை களைத் தெரிவு செய்து கழுதைகளை அவற்றின் வீடுகளுக்கு அனுப்பவேண்டும். அத்துடன் முடிவுகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வாக்காளர்கள் வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசின் மெத்தனமே இரண்டாவது அலை!

கொரோனாப் பெருந்தொற்றின் இரண்டாவது அலை இலங்கையில் வலுவாகப் பரவ ஆரம்பித்துள்ளது என்ற பீதிநிலையில் மக்கள் உறைந்துள்ளனர். கடந்த பல வாரங்களாகச் சமூகத்தொற்று இல்லாததை அடுத்து ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு தளர்த்தப்பட்டு – பாடசாலைகள், தனியார்கல்வி நிறுவனங்கள், வேலைத்தளங்கள் என்பன திறக்கப்பட்டு மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருந்த நிலையில் ஏற்பட்டுள்ள இந்த இரண்டாவது அலை மிகக் கனதியானது – பாரதூரமானது. அதனால் இந்தப் பெருந்தொற்றின்பால் மக்களுக்கு எழுந்துள்ள அச்சம் ஏற்கக்கூடியதுதான்.

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இருந்து இந்தப் பெருந்தொற்று மீண்டும் ஏற்பட்டுள்ளது. உச்சக்கட்டமாக நேற்றுமுன்தினம் மட்டும் 300 பேர் இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தனர் அவர்களில் 280க்கும் அதிகமானவர்கள் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தைச் சேர்ந்தவர்களே. நேற்று மாலை வரையில் கந்தகாடு மறுவாழ்வு மையத்தில் பணியாற்றிய மூன்றாவது ஆலோசகருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் ஆலோசகர் ஒருவரின் பிள்ளைகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப் பிள்ளைகளுடன் கல்விகற்கும் மாணவர்களும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த மாணவர்களில் ஓரிருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால்கூட நிலைமை மிகமிகத் துயரமாக மாறிவிடும். தொடர்ச்சியான தொற்றுக்கள் கட்டுக்குள் அடங்காமல் போகவும்கூடும்.

கொரோனா இரண்டாவது அலையென்பது புதிதான ஒன்றல்ல. கொரோனாவால் பாதிக்கப்பட்ட பல நாடுகளில் கொரோனா இரண்டாவது அலை ஏற்பட்டிருந்தது. சிங்கப்பூர், சீனா, ஸ்பெய்ன், ஈரான், அமெரிக்கா, தென்கொரியா போன்ற பொருளாதார வல்லரசுகள் கூட இந்த இரண்டாவது அலையில் இருந்து தப்பவில்லை. ஆனால் மேற்குறித்த நாடுகளில் அடையாளம் காணப்படாமல் இருந்த புதிய தொற்றாளர்கள் மூலமாகவே இரண்டாவது அலை ஏற்பட்டது. இலங்கையின் நிலை அப்படியல்ல. இங்கு ஏற்பட்டுள்ள இரண்டாவது பெருந்தொற்றுக்குக்காரணம் இலங்கை அரசும் அதன் மெத்தனப்போக்குமே.

ஒரு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து – அல்லது மறுவாழ்வு நிலையத்தில் இருந்து கொரோனா விஸ்வரூபம் எடுப்பதை எந்த வகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?. குறித்த தனிமைப்படுத்தல் மற்றும் மறுவாழ்வு மையங்களில் சமூக இடைவெளி உள்ளிட்ட எந்தவொரு நடைமுறையும் பின்பற்றப்படவில்லை என்பதையே இந்தப் பெருந்தொற்று தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றது. முன்னர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்திலும் கிட்டத்தட்ட இதே போன்றதொரு நிலை ஏற்பட்டபோது, குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் சுகாதார விதிமுறைகள் மற்றும் நெறிகள் உரிய வகையில் பின்பற்றப்படவில்லை என்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன. அதற்கு இராணுவத்தினர் உடனடியாக மறுப்புத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் கந்தகாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பெருந்தொற்றுக்கு அவர்கள் சொல்லக்கூடிய பதில்தான் என்ன?

தேர்தல் ஆட்சியதிகாரம் இவைமட்டும்தான் இந்த அரசின் தற்போதைய கொள்கைகளாக இருக்கின்றன. இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் என்று புகழாரம் சூட்டியவர்கள் தற்போது வாய்மூடி மௌனியாக இருக்கின்றனர். அனைத்தும் இராணுவத்தால் முடியாது என்பது இனியாவது அவர்களுக்குப் புரியட்டும் தெளியட்டும்.

# சுகாதார நடைமுறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும்

## மஹிந்த வேண்டுகோள்



கொழும்பு,ஜூலை 12

நாட்டில் கொவிட்19 வைரஸ் முழுமையாக இல்லாதொழிக்கப்படவில்லை. எனவே சுகாதாரத்தரப்பினர் விதித்துள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மின்னேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் போலியான செய்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

பொருளாதார வீழ்ச்சி கொவிட்19 வைரஸ் தாக்கம் என பல்வேறு பட்ட சவால்களை தற்போது நாம் எதிர்கொண்டுள்ளோம்.

பொதுத்தேர்தல் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கும் விதமாக இருக்க வேண்டுமே தவிர முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாக இருக்கக்கூடாது.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்த பலமான மற்றும் நிலையான அரசு தோற்றம் பெறவேண்டும்.

கடந்த அரசைப் போன்று முரண்பாடான அரசு தோற்றம் பெற்றால் நாடு பெரும் பின்னடைவைச் சந்திக்கும்.

எனவே பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு தோற்றம்பெறுவது அவசியமானது.

ஜனாதிபதியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அரசு தோற்றம் பெற வேண்டும் என்பது தொடர்பில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (க)

## வதந்திகளை நம்ப வேண்டாம்

### இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு,ஜூலை 12

கொவிட் - 19 வைரஸ் பரவல் தொடர்பில் சமூகத்தில் வதந்திகள் பரப்பட்டு வருகின்றன. எனவே, போலித்தகவல்களை நம்ப வேண்டாம், பரப்ப வேண்டாம் என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸால் நாட்டில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும், நாடு முடக்கப்படும் என்றெல்லாம் கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன. வீண் அச்சத்தை ஏற்படுத்தும் விதத்திலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனவே, வதந்திகளை நம்ப வேண்டாம்.

அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்படும் தகவல்களை மட்டும் ஏற்றுக்கொள்ளவும். அதேவேளை, தனிநபர் இடைவெளி, முகக்கவசம் அணிதல் உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (க)

## விமான நிலையத் திறப்பு மீண்டும் தாமதமாகலாம்

கட்டுநாயக்க விமான நிலையத்தை திறக்கும் நடவடிக்கை மேலும் தாமதமாகலாம் என்று விமான நிலையம் மற்றும் விமான சேவையின் உப தலைவர் ரஜீவ் சூரிய ஆராச்சி தெரிவித்தார்.

கொரோனா பரவலின் வேகம் அதிகரித்துள்ளதைக் கருத்திற் கொண்டு விமான நிலையத்தைத் திறக்கும் நடவடிக்கை மேலும் தாமதமாகலாம். இதேவேளை, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கையும் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கிலும் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூலை 12

கொழும்பில் தற்போது பலத்த மழை பெய்து வரும் நிலையில் ஊவா, கிழக்கு, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் மளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும். காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள்அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.0 - 2.5 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது – என்று தெரிவித்துள்ளது. (ஐ)

# தொல்பொருள் என்ற போர்வையில் மக்களின் காணிகள் கபளீகரம்

## அனுமதிக்க முடியாது என்கிறார் ரிஷாத்

**மன்னார், ஜூலை, 12**

**தொல்பொருள் திணைக்களத்துக்கு உரித்துடைய சொத்தானது, எமது முழு நாட்டுக்கும் சொந்தமானதேயொழிய, அது குறிப்பிட்ட சமூகத்துக்கு மாத்திரம் சொந்தமானதல்ல என முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தொல்பொருள் பிரச்சினை சில பிரதேசங்களில் தற்போது உருவெடுத்து வருகின்றது. சுமார் 30 வருடப் போரால் பல்வேறு கஷ்டங்களையும் பல இன்னல்களையும் வடக்கு, கிழக்கு மக்கள் சந்தித்தனர். உயிர்களையும் உடைமைகளையும் இழந்தது மட்டுமின்றி, காணிகளைக் கூட இழந்திருக்கின்றனர். போர் முடிந்து தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறிய மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். தொல்பொருளியல் என்ற போர்வையிலே, இந்த மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது.

பிரச்சினைகள் உள்ள இடங்களில் இதனைச் சாதுரியமாகத் தீர்த்து வைப்பது உரியவர்களின் பொறுப்பாகும். குறிப்பிட்ட பிரதேசத்தின் அரசியல்வாதிகள், சமூகத் தலைமைகள், மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதன் மூலம், இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் இதனைத் தீர்த்துக்கொள்ள முடியும். அதை விடுத்து, இதனை பூதாகரமாக்கி, இனங்களுக்கிடையிலான சச்சரவாக மாற்றுவதற்கு, சம்பந்தப்பட்ட தரப்பினர் இடமளிக்கக்கூடாது. வன்னி மாவட்டத்திலே, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, தரமான வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது.

சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது, இந்தப் பிரதேசத்தில் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருந்தார். பாகுபாடின்றி இதய சுத்தியுடன் பணியாற்றியவர். வன்னி மாவட்ட கிராமங்களுக்கு நாங்கள் செல்லும் போதெல்லாம் மக்கள் அவரது சேவைகளை நினைவுகூர்வதுடன், அதற்காக நன்றிக்கடன் செலுத்தவும் காத்திருக்கின்றனர். அதே போன்று, கடந்தகாலங்களில் நாமும் அமைச்சராக இருந்து, அதிக பணி செய்துள்ளோம். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்று சேர்ந்து வாக்களிக்கும் கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி பரிணமித்துள்ளதால், தொலைபேசிச் சின்னத்துக்கு அதிகளவான வாக்குகள் கிடைத்து, ஒன்றுக்கு மேற்பட்ட ஆசனங்களை வெல்லக்கூடிய வாய்ப்பு எமக்கு இருக்கின்றது - என்றார். (ப-56)




## சிறந்த தலைமைத்துவம் பொதுஜன பெரமுனவிடம்

### மஹிந்த பெருமிதம்



கொழும்பு, ஜூலை 12

உடனடித் தீர்மானம் மேற்கொள்வதன் மூலம் நாட்டை விரைந்து கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தக் கூடிய தலைமைத்துவம் பொதுஜன பெரமுனவிடம் உள்ளது. அந்தத் தலைமைத்துவத்துடன் கைக்கோர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

கேகாலை புதிய நகர மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியத் தலைமைத்துவம் உடனடித் தீர்மானம் மேற்கொண்டதன் மூலம் கொவிட் 19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முடிந்தது. அவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய திறன் கொண்ட தேசிய தலைமைத்துவமொன்று காணப்படுவது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மிகவும் உதவும். வெலிகட சிறைச்சாலையில் இறுதியாக அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளி தொடர்பில் தனிமைப்படுத்தல் சட்டத்தை செயற்படுத்தும் நடவடிக்கை மிகவும் பாராட்டத்தக்க விடயம். அதனால் கொவிட் 19 தொற்று மீண்டும் சமூகத்தில் பரவுவதைத் தடுப்பதற்கு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்கு முடிந்தது.

போரை நிறைவடையச் செய்வதற்காக பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அந்தக் காலத்தில் உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ள உதவினார்.

அந்தக் காலப்பகுதியைப் போன்று தற்போதும் கொவிட் 19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கும் உடனடித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்காலத்தில் உருவாக்கப்படும் அரசின் மூலம் புதிய சட்டங்களை நிறைவேற்றி, நிதிப் பிரேரணைகளைநிறைவேற்றி விரைவில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையைச் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பை வழங்கக்கூடிய நாடாளுமன்றை உருவாக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைவதற்கு ஆரம்பித்துள்ள நிலையில், இம்முறை பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியுமானதாக

## நிலத்தை பாதுகாக்க நன்றாக சிந்தித்து வாக்களியுங்கள்!

### முன்னாள் எம்.பி. வினோ கோரிக்கை

மன்னார், ஜூலை 12

தமிழர்களின் நிலம் பறிபோகாமல் இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேசத்தில் தனது ஆதரவாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்;

வன்னி மாவட்டமானது நூறு வீதம் தமிழர் பூமி. இங்கு தமிழர்களே ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும். வன்னியில் பெரும்பான்மை அமைச்சர் ஒருவரை உருவாக்கி விட அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அதற்கு தமிழர்களாகிய நாம் இடம் கொடுக்க முடியாது. விகிதாசார அடிப்படையில் வன்னியில் ஐந்து ஆசனங்கள் கிடைக்க வேண்டும்.

அது தவறுமாயின் பெரும்பான்மை இனத்தவர் வன்னிக்கு அமைச்சராகும் நிலை ஏற்படும். அதன்பின் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி திணைக்களம் போன்றவை தமிழர் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டைத் தடுக்க இயலாது. எனவே தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் - என்றார். (ப-213)

## எனக்கு வாக்களிக்கத் தவறினால் கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள்

### விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

கூட்டமைப்பின் பேச்சைத்தான் கொழும்பு பெரும்பான்மைக் கட்சிகள் கேட்கும். எனவே மக்கள் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் என்று, முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் செய்த சேவைகளின் மூலம் தர்மம் தலைகாக்கும் என்பதற்கு இணங்க நான் கட்டாயமாக நாடாளுமன்றம் செல்வேன். ஆகவே மக்கள் எனக்கு கட்டாயம் வாக்களிக்கவேண்டும். அவ்வாறு எனக்கு வாக்களிக்கத் தவறும் பட்சத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன். ஏன் என்றால் வடக்கு கிழக்கிலிருந்து செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு தான் கொழும்பு பெரும்பான்மைக் கட்சிகள் பேசும். ஆகவே மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார். (ப)

# கூட்டமைப்புக்கு வாக்களித்தால் தான் தமிழர் தலைநிமிர்ந்து நிற்க முடியும்

## வேட்பாளர் கமலதாசன் எடுத்துரைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால் மாத்திரமே சிறுபான்மைச் சமூகம் தலைநிமிர்ந்து நிம்மதியாக வாழக்கூடிய நிலைமை உருவாகும். இல்லையேல் எமது தலையெழுத்தை யாராலும் மாற்ற முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி ந.கமலதாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தற்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கட்சிகளில் பலர் போட்டியிடுகின்றனர். ஆனால் இவற்றில் பெரும்பாலான கட்சிகள் பெரும்பன்மைச் சமூகத்தின் ஆதரவுக் கட்சிகளாகவே காணப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை வீண் விரயம் செய்யாது. அனைவரும் வாக்களிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் தமிழர்களுக்கு மாத்திரம் வாக்களிக்க வேண்டுமே தவிர மாற்று இனக் கட்சிகளுக்கு வாக்களிப்பது எமது உணர்வுகளை நாமே குழிதோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானது. தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் விட்டால் தமிழர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லை என்று சர்வதேசத்துக்கு காட்டும். இந்தச் சமயத்தில் பெரும்பான்மை சமூகத்தினரால் நமது அபிலாசைகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விடும். இந்தத் தவறை எவரும் செய்ய வேண்டாம் - என்றார். (ப)

## ஊடகவியலாளர் மீது அச்சுறுத்தல்; பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 12

போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நியோமால் ரங்கஜீவ, புகைப்பட ஊடகவியலாளர் ஒருவரை சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்ற பொலிஸ் காவலரணில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் ஒருவரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார். கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில், ராடா நிறுவன வழக்கு தொடர்பிலான விசாரணைகள் குறித்து புகைப்பட செய்திகளை சேகரிக்கச் சென்ற, சிங்கள பத்திரிகையின் புகைப்பட ஊடகவியலாளரையே பொலிஸ் பரிசோதகர் நியூமால் ரங்கஜீவ அச்சுறுத்தி இவ்வாறு இடையூறு ஏற்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் காவலரணுக்கு தன்னை இழுத்துச் சென்ற பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ, அங்கு வைத்து தன்னைத் தாக்க முற்பட்டார் என்றும், அவரது உத்தரவுக்கு அமைய தனது கமெராவின் சிப் பறிக்கப்பட்டதாகவும், சம்பவத்துக்கு முகம்கொடுத்த புகைப்பட ஊடகவியலாளர் அகில ஜயவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்ற பொலிஸ் காவலரணில் முறைப்பாட்டை தான் பதிவு செய்தார் என்றும் அவர் கூறினார்.

பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ, வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் பிரதான பிரதிவாதியாக பெயரிடப்பட்டு, அவருக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ)

## ஐ.தே.க. கண்டனம்

கொழும்பு, ஜூலை 12



புகைப்படம் எடுக்க முற்பட்ட ஊடகவியலாளரை மேலாடையில் பிடித்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவவின் செயற்பாடு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணைக்காக முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ நேற்றுமுன்தினம் புதுக்கடை நீதிமன்றத்துக்கு வருகை தந்தார்.

தன்னை புகைப்படம் எடுத்தார் எனத் தெரிவித்து ஊடகவியலாளர் ஒருவரின் மேலாடையைப் பிடித்து இழுத்துச்சென்று பொலிஸாரிடம் ரங்கஜீவ ஒப்படைத்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

"வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலை வழக்கில் தொடர்புபட்டுள்ள ரங்கஜீவ, நீதிமன்ற வளாகத்தில் ஓர் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக செயற்படுவதற்கு யார் அதிகாரமளித்தது என்பதே எமக்குள்ள பிரச்சினையாகும். கடந்த காலத்தில் உயர் மட்டத்திலான ஊடக சுதந்திரத்தை வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி, தற்போதைய அரசாங்கத்தினால்முன்னெடுக்கப்படுகின்ற ஊடகங்களை முடக்கும் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியிருக்கிறது.

அதேவேளை நாம் நிலைநாட்டிய ஊடக சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை சீர்குலைப்பதற்குத் தற்போதைய அரசாங்கம் முற்படுமாயின், அதற்கு எதிராக அனைத்து ஊடக நிறுவனங்களும்ஒன்றிணைந்து ஊடக சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காகப் போராட வேண்டியது அவசியமாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மீண்டும் இந்த அரசாங்கம் தகவல்களை மறைப்பதற்காகஊடகவியலாளர்களைக் காணாமலாக்குதல், படுகொலை செய்தல் உள்ளிட்ட இருண்ட யுகத்துக்கு அனைவரையும் அழைத்துச் செல்லுமாக இருந்தால், அதுகுறித்து மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ஐ)

# இந்து ஆலயங்களையும் தமிழர்களையும் காப்பாற்ற மோடி தலையிட வேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 12**

**இந்துக் கோயில்கள் அபகரிப்பு மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடி தலையிட வேண்டும் என்று வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.**




போராட்டத்தை மேற்கொள்ளும் இடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

பௌத்த அடிப்படைவாதமே காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், அவர்களை கண்டுபிடிப்பதற்கும் தடையாக உள்ளது.

இந்துக் கோயில்கள் சிங்கள பௌத்த மத பிக்குகளால் நீண்டகாலமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில், வரலாற்று கோயில்கள் புத்த மதத்துக்குச் சொந்தமானவை என தெரிவித்த தேரரின் கருத்து எம்மை எல்லாம் அச்சமடையச் செய்துள்ளது ,

திருக்கோணேச்சரம் கோவில். இலங்கையில் உள்ள இரண்டு தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று.

இந்நிலையில்தற்போது சிங்கள பௌத்த பிக்குகள் கிழக்கு மாகாணத்தில் 25 கோயில்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவை என்று தெரிவித்து புத்த விகாரைகளைக் கட்டுவதற்கு முயற்சிப்பதாக இந்துக்கள் பயப் படுகிறார்கள். புதிய சிங்கள அரசாங்கம் ஒரு குழுவை உருவாக்கி, கிழக்கு மாகாண தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாத்தல் என்று கூறி, இந்துக் கோவில்களை கைப்பற்ற முயற்சி செய்வதுடன் நிலங்களைத் தோண்டி, அதனுள் சில பழைய புத்த சின்னங்களை வைக்கின்றன.

பின்னர் தங்களின் வரலாற்று பௌத்த இடம் என்று கூறி , இலங்கை இராணுவத்தை அனுப்புவதன் மூலம் அந்த இடங்களைப் பாதுகாக்கிறார்கள், இறுதியில் ஒரு புத்த கோவிலை கட்டி சிங்கள மக்களைக் குடியேற்றுகிறார்கள்.

இதை நாம் இனப்படுகொலை என்று அழைக்கிறோம்.

இந்தியாவின் அண்டை நாடு என்ற வகையில் இலங்கையில் இந்து மதத்தைப் பாதுகாப்பது பிரதமர் மோடியின் கடமையாகும்.

இந்தியாவால் திணிக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கமுடியாது. அது இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று ராவண பலய அமைப்பின் பொதுச்செயலர் சத்தாதிஸ்ஸ தேரர் வலியுறுத்தியுள்ளார். இது இந்தியாவின் வல்லமையை இழிவுபடுத்துவதாகும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் உள்ள பண்டைய இந்து நாகரிகத்தையும், கோவில்களையும் பாதுகாப்பது இந்து நாடு என்ற வகையில் இந்தியாவின் கடமையாகும்- என்றனர். (ஐ-110)

*கொரோனாத் தொற்றுக் காரணமாக*

## தனியார்துறையைச் சேர்ந்த 13,000 பேர் தொழில் இழப்பு

கொழும்பு, ஜூலை 12

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் தனியார்துறையைச் சேர்ந்த 13 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தமது தொழிலை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

546 தொழிற்சாலைகளில் பணிபுரிந்த 13,575 பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஊழியர்களுக்கு ஊதியம் வழங்காத மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொடுக்காத 381 தொழிற்சாலைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தொழில் திணைக்கள ஆணையாளர் நிலங்க வீரக்கொடி தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலைகளில் 2,700 க்கும் அதிகமானோர் பணிபுரிகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முறைப்பாடுகள் தொடர்பில் ஊழியர்கள் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் வேலைவாய்ப்பு பறிக்கப்பட்ட 782 பேரை மீண்டும் தொழிற்சாலைகளில் இணைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## கடந்த மூன்று வாரங்களில் 11 இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 12

கடந்த மூன்று வாரங்களில் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றிய 11 இலங்கையர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து கொரோனாத் தொற்றுக் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை வெளி நாட்டுப் பணியகம் அறிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரை மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றிய 24 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியம், சவுதி அரேபியா, குவைத், கட்டார், ஓமான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் பணியாற்றிய இலங்கையர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்களில் இரு பெண்களும் அடங்குகின்றனர் என பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த அனைவருக்கும் இறுதிக்கிரியைகள் அந்தந்த நாடுகளிலேயே செய்யப்பட்டுள்ளன. கொரோனா தொற்று காரணமாக அச்சடலங்கள் நாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சுகாதார நடைமுறை இல்லை

## கரு ஜயசூரிய குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 12

நாட்டிலிருந்து கொரோனா வைரஸ் பரவல் முற்றாக ஒழிக்கப்படாத நிலையிலும், பெரும்பாலான வேட்பாளர்களால் முன்னெடுக்கப்படும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய குற்றஞ்சாட்டி யுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தாலும், நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புக்களினாலும் தொடர்ச்சியாக எச்சரிக்கைகளும் அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் பொதுத்தேர்தல் வேட்பாளர்களின் பெரும்பாலான பிரசாரங்கள் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படவில்லை.

இன்னமும் எமது நாட்டிலிருந்து கொரோனா வைரஸ் பரவல் முற்றாக இல்லாதொழிக்கப்படாத நிலையில், இவ்வாறு செயற்படுவது முறையற்றதாகும் - என்றுள்ளது. (ஐ)

# அமைச்சர்களாகுவதற்குப் பேரம்பேசி வாக்குக் கேட்பது வெட்கக்கேடானது

## கூட்டமைப்பை சாடிய ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூலை 12

**மைத்திரி– ரணில் இணைப்பில் நல்லாட்சி உருவானபோதும். பின்னர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் அந்த அரசாங்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே முண்டு கொடுத்து நின்றார்கள். அப்போது இனத்தின் நலனுக்காகப் பேரம்பேசும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்கள் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையவிருக்கின்ற புதிய அரசாங்கத்தில் அமைச்சர்களாவதற்குப் பேரம்பேசித் தங்களுக்கு வாக்குக் கேட்பது வெட்கக்கேடானது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வடமராட்சியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் புதிய ஆட்சியில் கூட்டுப் பொறுப்புடன் அமைச்சரவையில் இணைவது குறித்துப் பேசியுள்ளார். மைத்திரி ரணில் கூட்டாட்சியில் குறைந்தபட்சம் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோர் தொடர்பானவர்களின் பிரச்சினை போன்றவை தொடர்பாகவேனும் நிபந்தனைகளை விதித்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றிருக்கமுடியும். ஆனால், அவர்கள் அங்கஜனுக்கு பிரதிச் சபாநாயகர் பதவி வழங்கக் கூடாது, டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி வழங்கக்கூடாது போன்ற நிபந்தனைகளை விதித்து தாங்கள் நிழல் அமைச்சர்களாகப் பதவி வகிக்க விரும்பினார்களே அல்லாது இனத்தின் நலன் சார்ந்து எதனையும் செயற்படுத்தவில்லை.

சுயேச்சைக் குழுக்கள் தங்களது வாக்குகளைப் பிரிப்பதற்காக களமிறக்கப்பட்டுள்ளன என அவர்கள் பேசிவருகின்றனர். நாங்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டாலும் தேர்தலின்போது மாத்திரம் தோன்றி மறையும் மழைக் காளான்கள் போன்றவர்களல்லர் - என்றார். (ப)

# ஞானசாரரின் பேஸ்புக் முடக்கம்; ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை, 12

பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் பேஸ்புக் பக்கம் தடை செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அபே ஜனபல கட்சியின் தலைவருமான அத்துரலியே ரத்ன தேரர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இனவாதி என்று குறிப்பிட்டே அவரின் பேஸ்புக் பக்கம் தடை செய்யப்பட்டுள்ளதாக அத்துரலியே ரத்ன தேரர் முறையிட்டுள்ளார். ஞானசார தேரரைப் பொறுத்தவரையில் அவர் முஸ்லிம் தீவிரவாதத்துக்கு எதிராகவே தமது கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார். இந்த நிலையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரும் அவர் இனவாதி என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். ஞானசார தேரர் கூறியவை சரியென்று நிரூபிக்கப்பட்ட பின்னர் ஏன் அவரின் சமூக ஊடகம் தடை செய்யப்பட வேண்டுமென்றும் ரதன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். (ப)

# தமிழ் மக்களின் அரசியலை புல்லுருவிகள் தீர்மானிக்க முடியாது

## வேட்பாளர் மா.கணபதிப்பிள்ளை

கொடிகாமம், ஜூலை 12

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தையும் அவர்களின் இருப்பையும் இடையில் வந்த புல்லுருவிகள் தீர்மானிக்க முடியாது என தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு கிழக்கு என்பது தமிழர் தாயகப் பகுதி அது எப்போதும் இணைந்திருந்தாலே தமிழ் மக்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னனான சங்கிலிய மன்னன் சிங்கள மன்னனான வீரியபண்டாரத்துக்கு அடைக்கலம் கொடுத்தபடியால் யாழ்ப்பாண இராச்சியத்தை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அடைக்கலம் புகுந்தவனை காக்க வேண்டும் என்ற தமிழ்ப் பண்பாட்டை குறித்த மன்னன் பறைசாற்றியபோதும் உள்நுழைந்த அடைக்கலம் பெற்றவனின் வஞ்சனைச் செயல்களினால் யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை இழக்கவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. தமிழர்களுடைய பண்பாடு கலாசாரம் நடத்தைக் கோலம் ஆகியன சிங்கள மக்களோடு வேறுபடுகின்ற நிலையில் தமிழர் ஒரு நாட்டுக்குள் இரு தேசமாக சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்குரிய ஆட்சி அதிகாரம் வேண்டும். சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழினக் குழுமம் திராவிடக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழர் என்ற பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்டுவந்துள்ளது - என்றார். (ப-159)

# 1000 ரூபா சம்பள விவகாரம் அரசியல் ஆக்கப்பட்டுள்ளது

## நவீன் திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 12

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு தமது ஆட்சியில் 1000 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று உறுதியளித்த இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் நவீன் தீஸாநாயக்க, பெருந்தோட்டத் துறையினரின் சம்பள விவகாரத்தை சிலர் அரசியலாக்கியுள்ளனர் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகயந்திரம் எம்மிடமே இருக்கின்றது. இந் நிலையில் எமது ஆட்சியில் கட்டயாம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக் கொடுப்போம் இது தொடர்பில் எம்மிடம் பல்வேறு வேலைத்திட்டங்கள் இருக்கின்றன. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள், அடிப்படை வசதிகள், சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை தற்போது தேர்தல் காலம் என்பதால் இந்தச் சம்பள விவகாரத்தை பல அரசியல்வாதிகள் அரசியல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அதனாலே இந்த விடயம் தொடர்பில் தெளிவுப்படுத்த எண்ணினேன்.




எமது ஆட்சியில் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பித்திருந்தோம். ஆனால் தோட்டக் கம்பனி உரிமையாளர்கள் இதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

அவர்கள் எப்போதும் தேயிலையின் விலை குறைந்துள்ளதால் தமக்குச் சம்பள அதிகரிப்பை முன்னெடுக்க முடியாது என்றும் அறிவித்து வந்தார்கள். இம்முறை தோட்டக் கம்பனி உரிமையாளர் இது போன்ற கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இனியும் இடமளிக்க மாட்டோம். 1000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கு எம்மிடம் சிறந்த திட்டங்கள் இருக்கின்றன - என்றார். (ப)

# கோத்தா அரசாங்கம் புதியது அல்ல

## ஐ.ம.சவின் வேட்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

தற்போதைய அரசாங்கம் புதிய அரசாங்கம் எனக் கூறுவது தவறெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் எரான் விக்கிரமரட்ன, 8 மாதங்கங்களாக இந்த அரசாங்கமே நாட்டை ஆட்சி செய்கிறது என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதைய அரசாங்கம் புதிய அரசாங்கமல்ல. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்கள் கடந்துள்ளன. இவ்வாறு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் முன்னைய அரசாங்கம் கொண்டு வந்த பொருளாதாரத் திட்டங்களை ஆராய்ந்த பின்னரே திருத்தம் செய்ய வேண்டும். தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செய்வதில்லை. அத்தோடு நல்லாட்சி அரசாங்கம் அரச ஊழியர்களைக் கௌரவத்துடனேயே நடத்தியது. அதனால் பிரச்சினைகள் அனைத்தையும் பேச்சுக்கள் மூலமே தீர்த்துக்கொள்ள முற்பட்டது. அதனால் அரச ஊழியர்களை அச்சுறுத்தி ஒருபோதும் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடாது - என்றார். (ப)

# கொரோனாத் தொற்றாளர்களுக்கு மூளையில் பாதிப்பு

## எச்சரிக்கின்றனர் பிரிட்டன் விஞ்ஞானிகள்

**லண்டன், ஜூலை 12**

**கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான சுவாசப்பிரச்சினை அறிகுறிகள் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு மூளையில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.**

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சி ஒருபுறம் தீவிரமாக நடந்துவரும் நிலையில், கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் பாதிப்பு குறித்து உலகம் முழுவதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக, பிரிட்டன் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு மூளை பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. எந்தவித அறிகுறியும் இல்லாமல் கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்களுக்கும், தொற்றிலிருந்து விடுபட்டவர்களுக்கும் மட்டுமே இந்த மூளைப் பாதிப்பை அதிக அளவில் பார்க்க முடிவதாக விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளனர். சிலருக்கு கொரோனாவின் முதல் அறிகுறியாக இந்த மூளைப் பாதிப்பு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் கொரோனா பாதிப்பு தொடங்கியது முதல் தற்போதுவரை, மூளை பாதிப்பு ஏற்படுவோரின் எண்ணிக்கை 3 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 பேரிடம் மேற்கொண்ட சோதனையில் 12 பேருக்கு மூளை வீக்கம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 10 பேருக்கு மயக்கம் இருந்ததும், 8 பேருக்கு நரம்பு பாதிப்பு இருந்ததாகவும், மேலும் 8 பேருக்கு பக்கவாதத்தை ஏற்படுத்தக் கூடிய நரம்பு மண்டல பாதிப்பு இருந்ததாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பாதிப்பு ஏற்பட்டோரில் 5 சதவீதம் பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் குணமடைகின்றனர் எனவும் ஆனால் சிலருக்கு இந்த மூளைப் பாதிப்பு நீண்டநாள் பிரச்சினையாக மாறுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆரம்பகால நோயறிதல்களுக்கு உதவுவதற்கும் நோயாளியின் குணப்படுத்துதலை மேம்படுத்துவதற்கும் நரம்பியல் விளைவுகளின் ஆபத்து குறித்து மருத்துவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

எனவே, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நோயுடன் தொடர்புடைய கடுமையான சுவாசப் பிரச்சினைக்கான அறிகுறிகள் காட்டாவிட்டாலும், அவர்களுக்கு பக்கவாதம், நரம்பு பாதிப்பு மற்றும் ஆபத்தான மூளை வீக்கம் உள்ளிட்ட நரம்பியல் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

எழுத்தாளரும் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் ஆலோசகரும் நரம்பியல் நிபுணருமான மைக்கேல் சாண்டி "மூளை அழற்சி போன்ற நரம்பியல் நிலைமைகளைக் கொண்ட நபர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். இந்த நிலைமைகளின் தோற்றம், சுவாச அறிகுறிகளின் தீவிரத்தோடு எப்போதும் தொடர்பு இல்லை. நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் மற்றும் கொரோனா நோயாளிகளின் இந்த சிக்கல்களைக் கவனிக்க வேண்டும்" என இது தொடர்பில் தெரிவித்துள்ளார். (ரி3)

## சைக்கிளை மோதிய ஓட்டோ கவிழ்ந்தது

### இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 12

வீதியால் சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவரின் பின்னால் வந்த ஓட்டோ மோதியதில் ஓட்டோ கவிழ்ந்ததுடன் முதியவரும் ஓட்டோவில் பயணித்தவரும் காயடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று காலை சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சி தெற்கு மறவன் புலவைச் சேர்ந்த சைக்கிளில் வந்த முதியவரும் (வயது-60), குறித்த ஓட்டோவில் பயணித்த நபரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி3-9)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை13ஆம் திகதி திங்கள் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** பருத்தித்துறை 3ம்குறுக்குத்தெரு, சிவப்பிரகாசம் பாடசாலை பிரதேசம், தும்பளை, வெளிச்ச வீடு பிரதேசம், மாதனை, கற்கோவளம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை பிரதேசம், புனிதநகர், நெல்லண்டை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** தவசிக்குளம் கிராமம், கிறிஸ்தவகுளம், வாரிக்குட்டியூர், சங்கரபுரம், புளியங்குளம் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி பிரதேசத்தில்** காலை 09.30 மணியிலிருந் து மாலை 5 மணிவரை முழங்காவில் கடற்படை முகாமிலும், **மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி,

கடலேரி வீதி, சாந்திபுரம், தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## தென்மராட்சியில் தேசிய விபத்து தடுப்பு வாரம்

சாவகச்சேரி .ஜூலை 12

தென்மராட்சி பிரதேசத்தில் தேசிய விபத்து தடுப்பு வாரம் ஜூலை 6ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை அனுஷ்டிக்கப்பட்டது. இக் காலப்பகுதியில், தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், பொலிஸார் ஆகியோர் இணைந்து பிரதேசத்தில் உள்ள கிராம மக்களிடையேவீட்டுவிபத்துக்கள், தற்கொலைகள், மன அழுத்தங்கள் போன்றவை தொடர்பாக விழிப்புணர்வு கருத்தமர்வுகளை நடத்தினர் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-9)



## இன்றைய நாள்

**மேடம்:** தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அலுவலகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவு எதிர்பார்த்ததை விட கூடுதலாக இருக்கும். வராது என்று நினைத்த பணத்தை வட்டியுடன் வசூலிப்பீர்கள்.

**இடபம்:** மறைமுகஎதிரிகளால்பிரச்சினை வரும். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்தவர்கள் உங்களுடன் வந்து இணைவர். வாகனம் வாங்க வங்கிக் கடன் கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நீடிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். எதிர் பாலினத்தினரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**கடகம்:** கலைத் துறையினரின் முயற்சிக்கேற்ற புதிய வாய்ப்புகள் உருவாகும். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளுடன் மனகசப்பு உண்டாகலாம்.

**சிம்மம்:** வியாபாரத்தில் கூட்டாளிகளுடன் ஒத்துப்போவது நல்லது. குடும்பத்தில் தேவையற்ற கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும். பணிச்சுமை அதிகரித்தாலும் அதை சமாளிப்பீர்கள்.

**கன்னி:** பணிச்சுமையை உடன் பணிபுரிபவர்கள் பகிர்ந்துகொள்வர். உறவினர்களால் சிறு சிறு சிக்கல்கள் உண்டாகும். வியாபாரத்தில் இருக்கும் பிரச்னைகளை நம்பிக்கையானவர்களுடன் பகிர்ந்துகொண்டுதீர்வு காண்பீர்கள்.

**துலாம்:** குடும்ப நிதிநிலை சீராக இருக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத புதிய வாய்ப்புகள் தேடி வரும். சமூகத்தில் முக்கிய நபர் என்று பெயர் எடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** எதிலும் விழிப்புணர்வுடன் செயல்படுவது அவசியம். அலுவலகத்தில் முக்கிய பணிகளை யாரை நம்பியும் ஒப்படைக்க வேண்டாம்.

**தனுசு:** சகஊழியர்களின் குடும்ப பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். இரவு நேரத்தல் நீண்ட தூரப் பயணங்களை தவிர்க்க வேண்டும்.


**மகரம்:** தந்தையின் உடல்நல பிரச்சினைக்கு உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. உத்தியோகத்தில் பொறுப்பு மிகவும் அதிகரிக்கும். குடும்ப நிதிநிலைமையைச் சமாளிப்பீர்கள்.

**கும்பம்:** மகளின் திருமண விஷயத்தில் பலமுறை சிந்தித்து முடிவெடுப்பது நல்லது. தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மீனம்:** மனைவி வழி உறவினரின் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். வியாபாரத்தில் சில நடைமுறைகளை மாற்றுவீர்கள்.

# நல்லூர் கந்தனுக்கு ஜூலை 25 இல் கொடி

**யாழ்ப்பாணம், ஜூலை 12**
**நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.**



யாழ். மாநகரசபையின் அமர்வு கடந்த வியாழக்கிழமை மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசன் தலைமையில் இடம்பெற்றபோதே மஹோற்சவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர் என்று யாழ். மாநகரசபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா நோய்த் தொற்றைத் தொடர்ந்து தற்போதுள்ள சுகா தார நடைமுறைகளுக்கமைய எமது சுகாதார வைத்திய அதிகாரி சில விடயங்களைத் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனடிப்படையில், இம்முறை ஆலயத்துக்கு உள்ளே செல்வதற்கு 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மஹோற்சவ காலப் பகுதியில் தூக்குக்காவடி, காவடி, அங்கப் பிரதட்சணை, அன்னதானங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் போன்ற செயற்பாடுகளை உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள முடியா தென்பதால் அவற்றுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்குள் இடம்பெறும் உற்சவ நிகழ்வுகள் தொடர்பில் ஆலய நிர்வாகம் கவனம் செலுத்தும். எனினும், உற்சவகாலத்தில் ஆலயத்துக்கு வெளியே இடம்பெறும் செயற்பாடுகளுக்கு யாழ். மாநகர சபையும், பாதுகாப்புப் பிரிவினருமே பொறுப்பாளிகள். தற்போதுள்ள சுகாதார நடைமுறைகளுக்கமைய இதுதான் நடைமுறை எனில் அதனைப் பின்பற்றுவதற்குத் தயாரென ஆலய நிர்வாகத்தினர் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். ஆகவே, சுகாதார நடைமுறைகளை மீறுவதற்கான அதிகாரம் எங்களிடமில்லை. தற்போதுள்ள சூழலில் சுகாதார நடைமுறைகளை நாங்கள் அனைவரும் பின்பற்றியே ஆக வேண்டும். மேலும், ஆலய உற்சவம் ஆரம்பமாவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் உள்ள நிலையில் குறித்த காலப் பகுதிக்குள் ஏதாவது தளர்வுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தயாராகவிருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி3)

## வலிப்பால் முதியவர் மரணம்

கொடிகாமம், ஜூலை 12
மீசாலை வடக்கைச் சேர்ந்த முதியவர் ஒருவர் வலிப்பு ஏற்பட்டு சாவடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று காலை கொடிகாமம் மிருசுவில் பகுதியில் இடம்பெற்றது.
வலிப்பு நோயாளியான இவரை நித்திரை விழிக்கவேண்டாமென மருத்துவர்கள் எச்சரிக்கை செய்தபோதும் தனது குலதெய்வம் கோவில் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொண்டு இரவு நித்திரை விழித்திருந்தார் எனவும், இன்று காலையில் வலிப்பு ஏற்பட்டு சாவடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.
மீசாலை வடக்கு புத்தூர் சந்தியில் தற்காலிகமாக வசிக்கும் வீரசிங்கம் தெய்வேந்திரம் (வயது 61) என்பவரே சாவடைந்தவராவார். (ரி3-9,159)

## சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை அமர்வு

சாவகச்சேரி, ஜூலை 12
சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை அமர்வு எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வழமைபோன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென சபையின் தவிசாளர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார்.
அத்துடன், சபையின் அமர்வுகளுக்குச் சமுகமளிக்கவுள்ளோர் சுகாதார உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய முகக் கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல் மற்றும் சமூக இடைவெளிகளைப் பின்பற்றுதல் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இதேவேளை, யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து மத்தியஸ்தர் சபை மற்றும் காணி மத்தியஸ்தர் சபை ஆகியவற்றின் அமர்வுகளை எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்துமாறு மாவட் மத்தியஸ்தர் சபைகளின் பயிற்சி அலுவலர் ப.சனாதனசர்மா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3-9)

## தென்மராட்சியில் மோட்டர்கள் திருடியவர் கைது

சாவகச்சேரி .ஜூலை 12
தென்மராட்சியில், கிணற்றடி மற்றும் தோட்ட வெளிகளில் வைக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் மோட்டர்களைத் திருடிய நபர் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.
நேற்றைய தினம் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபரைப் பிடித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அவ்வேளை அந்த குறித்த நபர் மோட்டர்கள் திருடியதாக ஒப்புக்கொண்டதுடன் நாவற்குழியில் வீடொன்றில் மறைத்து வைத்திருந்த மோட்டர்களையும் காட்டியுள்ளார்.
இதனையடுத்து குறித்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 9 நீர் இறைக்கும் மோட்டர்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணை களையும் மேற்கொண்டு வருகின்றனர். (ரி3-9)

## கைகழுவும் இயந்திரப் பொறிமுறை தொகுதிகள் அன்பளிப்பு



மன்னார், ஜூலை 12
கொரோனாத் தொற்று ஆபத்திலிருந்து பாடசாலைச் சமூகத்தினரைப் பாதுகாக்கும் முகமாக கைகழுவும் இயந்திரப் பொறிமுறை தொகுதிகள் மற்றும் மூன்று மாதங்களுக்குப் போதுமான தொற்று நீக்கித் திரவங்கள் என்பன முல்லைத்தீவு பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்த அன்பளிப்பு சுவிற்சர்லாந்து நாட்டின் தமிழ்ப் பெண்கள் அமைப்பினரின் நிதியுதவியில் வெளிச்சம் நிறுவனத்தினரால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (ரி3-222)



## அலங்கார உற்சவம்

கொடிகாமம், ஜூலை 12
மிருசுவில் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை ஆரம்ப மாக வுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 23ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கி ழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
தினமும் காலை 9 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகும் என்றும் ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-159)

## போதைப்பொருளுடன் 7 பேர் சிக்கினர்

கிளிநொச்சி, ஜூலை 12
ஹெரோய்ன் போதைப்பொருள் அருந்திய நிலையில் 6 பேர் கொண்ட குழுவினர் தருமபுரம் பகுதியில் உள்ள தனியார் கடையொன்றில் நேற்று இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 290 மில்லிக் கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இவர்கள் 19 தொடக்கம் 23 வயதுக்குட்ப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நேற்று மாலை கிளிநொச்சி உதயநகர் பகுதியில் சந்தேகநபர் ஒருவர் (வயது-31) 100 கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய் யப்பட்டுள்ளார். குறித்த போதைப்பொருள் கொழும்பு வத்தளை பகுதியிலிருந்து விற்பனைசெய்வதற்காக கிளிநொச்சி கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் சந்தேகநபரின் உள்ளாடைக்குள் பொலீத்தின் பையினால் சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ரி3-113,214)

## நெல்லியடியில் சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை

நெல்லியடி, ஜூலை 12
நெல்லியடி நகர்ப்பகுதியில் உள்ள. உணவு கையாளும் நிலையங்களுக்கு காலை உணவு தயாரித்து வழங்குவோர் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.
இந்தப் பரிசோதனைகள் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று காலை மேற்கொள்ளப்பட்டன.
மருத்துவப் பரிசோதனை அறிக்கை இன்மை, தனிநபர் சுகாதாரம் பேணாத நிலையில் பாதுகாப்பற்ற வகையில் உணவுப்பொருள்களைக் கொண்டு வந்தமை போன்ற குறைபாடுகளுடன கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்கள் திருப்பி அனுப்பப்பட்டமையுடன், அந்த உணவுகளைக் கொண்டுவந்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி3-9)

# புனிதமிழந்த கோஷங்கள்

நிலாந்தன்

அமெரிக்க எழுத்தாளரான ஹெனெஸ்ட் ஹெமிங்வேயின் உலகப் புகழ்பெற்ற நாவல் 'போரே நீ போ'. இந்நாவலின் இறுதிக்கட்டத்தில் அதன் பிரதான கதாபாத்திரம் தனக்குள் சிந்திப்பதாக பின்வரும் தொனிப்பட ஒரு பந்தி உண்டு அமைதி, சமாதானம், யுத்த நிறுத்தம், நல்லிணக்கம் போன்ற வார்த்தைகள் அவற்றின் புனிதத்தை இழந்துவிட்டன. இப்பொழுதும் புனிதமிழக்காமல் இருக்கும் வார்த்தைகள் எவை என்று பார்த்தால் வீதிகளின் பெயர்கள், நகரங்களின் பெயர்கள், படையணிகளின் பெயர்கள், படைப் பிரிவுகளின் பெயர்கள் போன்றவை தான்.

இது ஒரு யுத்த களத்தைப் பற்றிய சித்திரிப்பு. ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 11 ஆண்டுகளின் பின் இலங்கைத் தீவில் தமிழ்ப் பகுதிகளில் தேசம், தேசியம், தாயகம், சுயநிர்ணயம், உரிமை, விடுதலை போன்ற வார்த்தைகளும் அவற்றின் புனிதத்தை இழந்து விட்டனவா ? என்று கேட்கத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் ஒன்றை ஒன்று வெட்டும் சந்தியில் சுவர்களில் டக்ளஸ் தேவானந்தாவின் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டிருக்கிறது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது...... தமிழர் தேசம் தலை நிமிர வீணைக்கு வழங்கும் ஆணை விடியலைத் தரும் நாளை. இங்கு அவர் தேசம் என்று கருதுவது எதனை? அவர் கருதும் தேசத்துக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கும் ஒரு நாடு இரு தேசத்தில் வரும் தேசத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? அவர் கருதும் தேசத்துக்கும் கூட்டமைப்பு முன்வைக்கும் தேசத்துக்கும் அவர்தான் கூறவேண்டும்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் அங்கஜன் இராமநாதன் விநியோகித்த ஒரு துண்டுப் பிரசுரத்தை பார்த்தேன். அதில் அவர் 'எனது அரசியல் நிலைப்பாடு' என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறுகிறார். தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை நான் நன்கு புரிந்து கொண்டவன். என்னால் முடிந்த அளவுக்கு எமது மக்களின் அரசியல் பொருளாதார சமூக மற்றும் கலாசார முரண்பாட்டுக்கு உழைக்க வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையிலேயே நான் அரசியலுக்குள் பிரவேசித்தேன். எமது மக்களின் உரிமைக்கான போராட்டத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் காட்டிக் கொடுக்கவும் இல்லை அதற்கு எதிராகச் செயற்படவும் இல்லை.....

அங்கஜன் யார்? எந்தக் கட்சியின் சார்பாக அவர் தேர்தலில் நிற்கிறார்? அவருடைய கட்சிக்கும் இனப்பிரச்சினைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையா? இறுதிக்கட்டப் போரை முன்னெடுத்து அவருடைய கட்சி இல்லையா? கிழக்கில் ஓரிடத்தில் கருணா கோட்டும் சூட்டுமாக நிற்கும் ஒரு படத்தின் கீழ் எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம் என்று எழுதப்பட்டு ஒரு கட்டவுட் வைக்கப்பட்டுள்ளது. இது அவர் முன்பு புலிகள் இயக்கத்தில் இருந்த பொழுது தளபதியாக இருந்த ஜெயந்தன் படையணியின் இலட்சிய வாசகம் ஆகும். இங்கு கருணா கூறவருவது யாருடைய வெற்றியை?

இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு கேள்வி எழும். தென்னிலங்கை மையக் கட்சிகள் அல்லது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்டிராத கட்சிகள் அல்லது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு எதிரான கட்சிகள், தமிழ்த் தேசியவாதிகளின் கோஷங்களை முன்வைக்கின்றன என்று சொன்னால் அதன்மூலம் அவர்கள் வாக்காளர்களை கவர நினைக்கிறார்களா? ஒரு கோஷத்தை முன் வைக்கும் அரசியல்வாதியின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இருக்கக் கூடிய வேறுபாட்டை வாக்காளர்கள் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்று அவர்கள் நம்புகிறார்களா? அவ்வாறு கோஷங்களுக்கும் செயல்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய முரண்பாட்டைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு தமிழ் தேசியவாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்களின் வாழ்க்கையும் செயலும் அமைந்து விட்டனவா? அதாவது தமிழ்த் தேசியவாதிகளின் அரசியல் ஒழுக்கத்துக்கும் தமிழ்த் தேசியவாதிகளல்லாத அரசியல்வாதிகளின் அரசியல் ஒழுக்கத்துக்கும் இடையிலான வேறுபாடு சிறுத்துப் போய் விட்டதா? ஒரு தேர்தல் கோஷம் எனப்படுவது வெறும் சொல்லு அல்ல. அது ஒரு மந்திரம், அது ஒரு செயல். அது ஒரு வாழ்க்கை முறை. அது இரத்தத்தினாலும் தசையினாலும் உருவாக்கப்பட்ட ஒன்று.

ஒரு கட்சி அல்லது அமைப்பின் தொடர்ச்சியான செயற்பாட்டால் தியாகத்தால் உயிர் ஊட்டப்பட்ட ஒன்று. கட்சித் தியாகிகளின் பல வருடகால உழைப்பின் திரண்ட சொல். அவ்வாறு தன் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே வேறுபாடு அற்ற ஒரு அரசியல் வாழ்க்கையை கொண்டிருக்கக் கூடிய ஓர் அரசியல்வாதிதான் தன் வாழ்க்கையின் பிழிவாகக் காணப்படும் அல்லது அவருடைய வாழ்க்கையின் சாராம்சமாகக் காணப்படும் ஒரு கோஷத்தை முன் வைக்கும் பொழுது அதற்கு ஓர் உயிர் இருக்கும். அதற்கு ஒரு செயல் வேகம் இருக்கும். அதற்கு ஒரு புனிதம் இருக்கும் . அதற்குள் ஒரு நெருப்பு இருக்கும். மார்க்சியவாதிகள் கூறுவதுபோல அந்தக் கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்.

ஆனால் தமிழ்த் தேசிய அரங்கில் பெரும்பாலான அரசியல்வாதிகளின் செயல்களுக்கும் சொற்களுக்கும் இடையே பாரதூரமான இடைவெளி உண்டு குறிப்பாக கடந்த பதினொரு ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக காணப்படும் கூட்டமைப்பு தாயகம் தேசியம் சுயநிர்ணயம் போன்ற தோஷங்களின் புனிதத்தை இல்லாமல் செய்து விட்டது. அதுமட்டுமல்ல விடுதலை சுதந்திரம் போராட்டம் போன்ற சொற்களின் புனிதத்தையும் அவர்கள் அழித்து விட்டார்கள். கடந்த 11 ஆண்டுகளாக நாட்டில் எந்த ஒரு போராட்டத்தையும் அவர்கள் முன் நின்று நடத்தவில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மக்கள் போராடிய போது அந்தப் போராட்ட கொட்டிலுக்குள் அவர்கள் போய் குந்தி இருந்தார்கள் என்பதே சரி.

அவர்கள் சுதந்திரம் என்று கருதும் ஒன்றுக்காக அல்லது விடுதலை என்று கூவித் திரியும் ஒன்றுக்காக அவர்கள் எதை தியாகம் செய்திருக்கிறார்கள்? எந்த அளவுக்கு ரிஸ்க் எடுத்தார்கள் ? இக்கேள்விகளுக்கு துணிந்து பதில் சொல்லத்தக்க கூட்டமைப்பு அரசியல்வாதிகள் எத்தனை பேர் உண்டு ?

இதுதான் பிரச்சினை கடந்த 11 ஆண்டுகளாக தமிழ்ப் பிரதிநிதிகளாகக் காணப்பட்ட கட்சியின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இருந்த பாரதூரமான வேறுபாடு இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளும் தேசம் உரிமை என்றெல்லாம் கூறும் ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறதா? யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சட்டச் செயற்பாட்டாளரான ஒரு புலமையாளர் சொன்னார்... இம்முறை கூட்டமைப்பின் சுவரொட்டிகளையும் கோஷங்களையும் கவனித்தீர்களா? அவர்களில் அநேகமானவர்கள் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற சொற்களைத் தவிர்ப்பதாக எனக்குத் தோன்றுகிறது. மன்னாரின் சாள்ஸ் நிர்மலநாதன் போன்ற சிலரைத் தவிர பெரும்பாலான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதைவிட வேறு கோஷங்களை விரும்பி பயன்படுத்துகின்றனர் எனத் தெரிகிறது அவர்கள் அவ்வாறு பாவிப்பார்களாக இருந்தால் அது அந்த கோஷங்களுக்கும் நல்லது. தமிழ் மக்களுக்கும் நல்லது. அதில் ஒரு நேர்மை இருக்கிறது.

தாங்கள் வாழ்ந்து காட்டாத ஓர் அரசியலுக்கு உரிய கோஷங்களை அவர்கள் பயன்படுத்தாமல் விடுவது நல்லது. விக்னேஸ்வரனின் கூட்டுதனது முதன்மைக் கோஷத்தை தன்னாட்சி தற்சார்பு தன்னிறைவு என்று மாற்றிக்கொண்டு விட்டது ஏன் மாற்றியது?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளும் ஒரு விடயத்தை உறுதிப்படுத்த வேண்டும். தாங்கள் முன்வைக்கும் கோஷங்களுக்கும் தமது செயற்பாடுகளுக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்பதனை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். செயலுக்கு போகாத கோஷங்கள் வெற்றுச் சொற்களே. கிலுகிலுப்பைகளே. அவை மக்களை செயலுக்குத் தூண்டுவதில்லை. சனங்கள் கோஷங்களைக் கேட்டா வாக்களிக்கிறார்கள்?

எனவே தாங்கள் செய்யாத ஓர் அரசியலை கோஷமாக முன்வைக்கும் தமிழ்க் கட்சிகள் அந்தச் சொற்களின் புனிதத்தை அழிக்கின்றன. மாறாக தாங்கள் முன் வைக்கும் இலட்சிய சதங்களில் வாழ்ந்து காட்ட வேண்டும்.

அப்பொழுதுதான் அந்தச் சொற்களுக்குச் சக்தி பிறக்கும். அவ்வாறுதாம் முன்வைக்கும் கோஷங்களுக்குத் தமது வாழ்க்கை முறையால் உயிரூட்டும் அரசியல் வாதிகள் யாருண்டு? மக்களே அவர்களுக்கு வாக்களியுங்கள்.



> தாங்கள் செய்யாத ஓர் அரசியலை கோஷமாக முன் வைக்கும் தமிழ்க் கட்சிகள் அந்தச் சொற்களின் புனிதத்தை அழிக்கின்றன. மாறாக தாங்கள் முன் வைக்கும் இலட்சிய வாசகங்களின்படி வாழ்ந்து காட்ட வேண்டும்.

# தந்தை – மகன் மோதல்; தந்தை பலி!

கொழும்பு, ஜூலை 12
தந்தை மற்றும் மகனுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 61 வயதுடைய தந்தை உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பாதுக்க பொல்காட்டுவ கஹவல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
இருவரும் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொண்ட நிலையில் காயமடைந்த 34 வயதுடைய மகன் பாதுக்கை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். நேற்றைய தினம் கருத்து முரண்பாட்டின் காரணமாக தந்தை- மகன் இடையே மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ரி1)

# சம்பிக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



கொழும்பு, ஜூலை 12
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2016 ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதியன்று இராஜகிரியப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தின்போது முறையற்ற விதத்தில் செயற்பட்டமை மற்றும் நபர் ஒருவரை காயத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பில் குறித்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி1)

# 234 பேர் தாயகம் வருகை

கொழும்பு, ஜூலை 12
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிரிட்டனில் தங்கியிருந்த 234 பேர் நேற்று நாடு திரும்பி யுள்ளனர். ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் அவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். (ரி1)



# புதிய தொற்றுக்கள் பெரும் சவால் இல்லை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 12**
**சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கடந்த இரண்டு நாள்களாகக் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் பெருமளவான கொரோனா நோய் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை எமக்கு பெரும் சவாலாக இருக்காது. நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம். நாட்டில் கொரோனா பரவலின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கின்றது. குறித்த புனர்வாழ்வு முகாமில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இருக்கலாம். எனினும், சமூகத்தில் வைரஸ் பரவாமல் தடுக்க அரசாங்கம் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

# பாலியல் வன்கொடுமை செய்தவர் உறவினர்களால் அடித்துக் கொலை

கொழும்பு, ஜூலை 11
5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்குட்படுத்திய நபரை உறவினர்கள் அடித்துக் கொலை செய்த சம்பவம் பாணந்துறை மொரன்துட்டுவ பகுதியில் நேற்று இடம்பெற் றுள்ளது.
அந்தச் சிறுமியின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது வீட்டில் பிறந்தநாள் நிகழ்வுக்கு வந்த நபர் அந்த சிறுமியை பாலி யல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியுள்ளார் என்றும், சிறுமியின் தந்தை மற்றும் மாமன்மார் சந்தேகநபரை தடி ஒன்றினால் தாக்கி கொலை செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.
சம்பவத்தில் உயிரிழந்தவர் 45 வயதான நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர்களைப் பொலிஸார் கைது செய்தமையுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ரி1)

# கருணாவை கைது செய்யுமாறு மனுத் தாக்கல்

கொழும்பு,ஜூலை 12
கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை உடனடியாகக் கைது செய்வதற்கு பதில் பொலிஸ்மா அதிபருக்கு கட்டளையிடுமாறு கோரி எழுத்தாணை மனுவொன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 25 ஆம் திகதி உயர் நீதிமன்றில் கருணா அம்மானின் கருத்துக்கு எதிராக அடிப்படை உரிமைமீறல் மனுவைத் தாக்கல் செய்த, கடுவலை நகரசபையின் உறுப்பினரும் பகுதி நேர வகுப்பு ஆசிரியருமான போசெத் கலஹே பத்திரனவே இந்த மனுவையும் தாக்கல் செய்துள்ளார்.
ஒரே இரவில் இரண்டாயிரம், மூவாயிரம் இராணுவ உறுப்பினர்களைக் கொன்ற தாம், கொரோனா தொற்றை விட ஆபத்தானவர் எனக் கருணா வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி ஜலித் விஜேசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட் இந்த மனுவின் பிரதிவாதிகளாக கருணா அம்மானும், சட்டமா அதிபரும், பதில் பொலிஸ்மா அதிபரும் பெயரிடப்பட்டுள்ளனர். தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது வெளியிடப்பட்ட அந்தக் கருத்தின் மூலம் அவர் சமூகக் கொலைக்குற்றவாளி என்பது உறுதியாகியுள்ளது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. அந்தக் கருத்தை ஒப்புதல் வாக்கு மூலமாகக் கருதி அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் கருணாவின் கருத்துக்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈட்டையும் தமக்கு பெற்றுத் தரு மாறு இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (ரி2)

# போதை மாத்திரைகளை கடத்த முற்பட்டவர் கைது

கொழும்பு, ஜூலை 12
பிரான்ஸிலிருந்து போதைமாத்திரைகளை நாட்டுக்குள் கடத்த முற்பட்ட ஒருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடமிருந்து 5,716 போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த போதை மாத்திரைகளின் பெறுமதி 2 கோடி ரூபாவைவிட அதிகம் எனவும் தெரியவருகின்றது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

# அன்னதானங்களுக்கு பதிலாக மாணவர்களுக்கு உதவுங்கள்!

## *பொது சுகாதாரப் பரிசோதகர் வேண்டுகோள்*

தென்மராட்சி, ஜூலை 12
தென்மராட்சி பிரதேச ஆலயங்களில் இவ்வருடம் அன்னதானம் கொடுக்க விரும்புவோர் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு அந்த நிதியைப் பயன்படுத்துமாறு சாவகச்சேரிநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,
தற்போது ஆலய திருவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றமையால் அவற்றுக் கான அனுமதிகளை வழங்கவேண்டிய பொறுப்பும் அவற்றைக் கண்காணிக்க வேண்டிய கடமையும் பொதுச் சுகா தாரப் பரிசோதகர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. திருவிழாவுக்கான அனுமதி பெற வருபவர்கள் எப்படியாவது அன்ன தானம் கொடுப்பதற்கு அனுமதி வழங்குமாறு தொடர்ச்சியாக நச்சரித்தபடி உள்ளார்கள்.
ஆனால் சுகாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அன்னதான நிகழ்வுகளுக்கு அனுமதியை மறுத்தே வருகிறோம். உண்மையில் அன்னதானத்தால் பசி ஆறுவது மட்டுமல்ல சமூக ஆரோக்கியமும் அதி கரிக்கும். ஆனால் தற்காலத்தில் இது தேவையற்றது என்பது நீங்கள் யாவரும் அறிந்ததே.
அதேநேரம் தற்போது ஆரம்பமாகியுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் சிகிச்சை அறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இன்றுவரை பரிசோதித்த பாடசாலைகள் பலவற்றில் இச் சிகிச்சை அறைகளுக்கான கட்டில் வசதிகள் இல்லா தமையால் பாடசாலை வாங்குகளையே கட்டில்களாகப்பயன்படுத்தி சிகிச்சை அறைகளை அதிபர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளனர். எனவே அன்னதானம் வழங்கப்படவேண்டும் என விரும்பும் பக்த அடியார்களே! இந்த வருடம் ஆலய அன்னதானங்களை நிறுத்தி விட்டு அப் பணத்தில் பாடசாலைகளுக்கான சுகாதார வசதிகளை ஏற்படுத்த முன்வருவீர்களானால் நிச்சயமாக உங்கள் எதிர்கால சமுதாயத்தை நல்ல ஆரோக்கியமான மற்றும் கல்வியறிவுமிக்க சமூகமாக உருவாக்கலாம் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (ரி3-9)



## இருபாலையில்
# முன்பள்ளிக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஜூலை 12

பிரதேச சபை நிதி மூலம் அரச முன்பள்ளி அமைப்பதற்கான வேலைகளை இருபாலையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆரம்பித்து வைத்துள்ளது. கடந்த வாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களால் அடிக்கல் நடப்பட்டு முன்பள்ளிக்கான வேலைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதுதொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா நிரோஷ் கருத்துத் தெரிவிக்கையில்-

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் அரச முன்பள்ளி ஒன்றை நிறுவும் முயற்சியாக இச் செயற்றிட்டத்தை 4.15 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் நாம் முன்னெடுத்துள்ளோம். எமது பிரதேச சபைக்கு உட்பட்ட அச்சுவேலி மற்றும் புத்தூர் உப அலுவலகங்களில் ஏற்கனவே முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. காலக்கிரமத்தில் நீர்வேலி, உரும்பிராய் உப அலுவலகங்களின் கீழும் அரச முன்பள்ளிகளை ஆரம்பிக்கும் எண்ணமும் தேவையும் எம்மிடம் காணப்படுகின்றன.

மேலும் இங்கு கல்வி பெறும் குழந்தைகளுக்கு இதர போசாக்கு மற்றும் நலன்நோன்பு விடயங்கள் மீதும் எமது சபை அதிக கரிசனை கொள்கின்றது.

எமது சபைக்குட்பட்ட முன்பள்ளிகளில் அரிச்சுவடி முன்பள்ளியை நவீன வசதிகளுடன் அண்மைய காலப்பகுதியிலேயே திறந்து வைத்தோம். இதேவேளை அச்சுவேலி கஜமுகன் முன்பள்ளியில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும். இலங்கை போன்ற நாடுகளில் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் உரியவாறு கண்டு கொள்ளப்படுவதில்லை. இந் நிலையில் எமது பிரதேச சபை முன்பள்ளி மற்றும் சிறார்களின் நலன்நோன்பு விடயத்தில் அதீத கவனம் கொள்ள விரும்புகின்றது எனத் தெரிவித்துள்ளார். (ரி3)



## இலங்கையரை அழைத்து வருவதில் சிறு தடங்கல்

வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.


தற்போதைய நிலையில், தனிமைப்படுத்தல் முகாம்களில் போதிய வசதி இல்லாத காரணத்தால் இந்த நடவடிக்கை மட்டுப்படுத்தப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி1)

## கொரோனா தொற்றுக்குள்ளான கைதிக்கு
# சிறையில் முடி திருத்தும் பணி

கொழும்பு, ஜூலை 12

கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய வெலிக்கடை சிறைச்சாலை கைதி கடந்த 30ஆம் திகதி முதல் வெலிக்கடை சிறைச்சாலை வைத்திய சாலையில் உதவிப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் கைதி ஹெரோய்ன் போதைப்பொருள் வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவராவர்.




அவர் அறை I இல் கடந்த 17ஆம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இதற்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதியுடன் இந்தக் கைதியும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு சிறைச்சாலை வைத்திய சாலை நோயாளிகளின் தலைமுடி வெட்டும் பணி வழங்கப்பட்டிருந்து. இந்தக் காலப்பகுதியில் அவர் கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலருக்கு தலைமுடி மற்றும் தாடி, மீசை வெட்டியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. (ரி1)

## கட்டுக்கடங்காது அதிகரிக்கும்
# கொரோனா!

**கொழும்பு, ஜூலை 12**

**கொரோனா வைரஸ் தொற்றானது கட்டுக்கு அடங்காமல் அதிகரித்து வருவதாக ஐ.நாவின் உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது.**

6 வாரங்களில் மட்டும் இது 12 மில்லியன் மக்களைத் தாக்கியுள்ள நிலையில், இதுவரை 5 லட்சத்து 50 ஆயிரம் பேர் இறந்துள்ளார்கள் என்றும் உலகில் 76 நாடுகளில் கொரோனா இன்றும் பெரிய அளவில் தொற்றி வருகிறது என்றும் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரிட்டன் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் அதன் தாக்கம் குறைவடைந்து வரும்நிலையில், அமெரிக்கா, ரஷ்யா, பிரேசில், இந்தியா போன்ற நாடுகளில் கொரோனாத் தாக்கம் இரட்டிப்பாக அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இந்த நாடுகளில் உள்ளவர்கள், மீண்டும் ஐரோப்பா சென்றால், இதன் இரண்டாம் அலை ஐரோப்பாவில் வீசக்கூடும் என்ற அச்சமும் தற்போது எழுந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# தேடுதல் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 12

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்ட கைதிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்களை கண்டுபிடிக்கும் நடவழிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரும் தேசிய புலனாய்வுப் பிரிவினரும் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் உள்ளவர்களைப் பார்ப்பதற்காக சென்றவர்கள் தொடர்பாக, தகவல் சேகரிக்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை காரணமாக, மேலும் பலர் தனிமைப்படுத்தப்படலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி1)

# போலிச் செய்திகள் வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் பல பாகங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் காணப்படுகின்றனர் என்று போலியான செய்திகளைப் பரப்பும் நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இவ்வாறு போலியான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பரப்பும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற தவறான தகவல்களால் பொதுமக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். இந்த நிலையில், கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் மற்றும் அரசாங்கத் தகவல் இயக்குநர் ஜெனரல் வெளியிடும் அதிகாரபூர்வ செய்திக் குறிப்புகளை மட்டுமே நம்புமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ரி2)



# பொலிஸாரால் ஒருவர் சுட்டுப் படுகொலை

மொரட்டுவ, ஜூலை 12

மொரட்டுவ லுனாவ பகுதியில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது;

இந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில், ஈடுபட்டிருந்த அங்குலான பொலிஸார் மூவர் திடீர் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, முச்சக்கர வண்டி ஒன்றை சோதனைக்குட்படுத்திய போது, அதில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முரண்பாடாக மாறியுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த நபர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமையை அடுத்து, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போதே, இந்த நபர் உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தையடுத்து பொலிஸாரை பிரதேசமக்கள் சுற்றி வளைத்தமையை அடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது என்றும் கூறப்பட்டது. (ரி2)





# கடலுக்கடியில் அருங்காட்சியகம்

### திருகோணமலையில் திறப்பு

கொழும்பு, ஜூலை 12
இலங்கைக் கடற்படையினரால் கடலுக்கு அடியில் இரண்டாவது அருங்காட்சியகம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வாவினால், திருகோணமலை சேண்ட் பே கடற்பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சேண்ட் பே கடற்கரைப் பகுதியும் அதனைச் சூழவுள்ள பகுதியும் சுற்றுலாப் பயணிகளை அதிகமாக கவர்ந்திழுக்கும் பகுதியாகக் காணப்படுகின்றது.
திறந்து வைக்கப்பட்ட குறித்த அருங்காட்சியகமானது சுமார் 60 அடி ஆழத்தில் உள்ளதோடு 150 அடி நீளமும், 85 அடி அகலமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# தேர்தல் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டலை துரிதமாக வர்த்தமானியில் வெளியிடுங்கள்!

### மஹிந்த தேசப்பிரிய அவசர கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 12**
**தேர்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் ஆலோசனைகள் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படாமையால் பிரசார கூட்டங்களில் சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகள் பின்பற்றப்படாமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

விசேட அறிவிப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்கள் ஆணைக்குழு தற்போது முகங்கொடுத்துள்ள பெரிய பிரச்சினை பிரசாரக் கூட்டங்களில் சுகாதார பாதுகாப்பு ஆலோசனை வழிகாட்டல்கள் பின்பற்றப்படாமையாகும். ஜூன் மாதம் 3 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் ஆலோசனைகள் வெளியிடப்பட்டன. இவை வெளியிடப்பட்டு 5 வாரங்கள் கடந்துள்ள போதிலும் இன்னும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. இதற்கு நீதிமன்றம் மற்றும் ஜனாதிபதி செயலகம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சிறிதளவும் சமூக இடைவெளி பேணப்படாமல் பிரசாரக் கூட்டங்களில் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.
இவ்வாறான சந்தர்ப்பத்தில் தொற்றுக்குள்ளான ஒருவர் காணப்பட்டாலும் அனைவரும் பாதிக்க வேண்டியேற்படும். எனவே இந்த ஆலோசனைகளை துரிதமாக வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ரி1)

வவுனியாவில் நடந்த

# சர்வமத குழுவினரின் ஒன்றுகூடல் நிகழ்வு



வவுனியா, ஜூலை 12
வவுனியாவில் சர்வமதக் குழுவினர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்கள் கலந்துகொண்ட ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.
கொரோனாப் பெருந்தொற்று ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மேலும் சமூகத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாதவகையில் தடுக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடலாக இந்த ஒன்றுகூடல் அமைந்திருந்தது.
'மத சக வாழ்வுக்கான கூட்டு ஈடுபாடு' எனும் தொனிப்பொருளில் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சர்வமதக் குழு மாவட்ட மட்ட இணைப்பாளர்களான எம்.யு.எம். உவைஸ், ஏ.மெடேசன், கெ.நிசாந்த குமார, மதத் தலைவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகள் உட்பட நாற்பது பேர் கலந்துகொண்டிருந்தனர்.
கொரோனாத் தொற்றின்போது அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்ட காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் சர்வமதக் குழுவினரால், இருபது கிராமங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டமையுடன் தேசிய சமாதானப் பேரவையின் நிதி உதவியுடன் சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு உலர் உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டன.
அத்துடன் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் நிதிப் பங்களிப்புடன் நான்கு நவீன கை கழுவும் இயந்திரங்கள் சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன.
மேலும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கையாக மதத் தலங்களை கண்காணிப்பதற்காக சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து கண்காணிப்பதற்கு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் பிரதேச சர்வமத குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் போதகர். பி.என். சேகர் தெரிவித்தார். (ரி3-110)

ஏப்.21 தாக்குதல் தொடர்பில்

# நிலந்த ஜயவர்தன 152 மணி நேர வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 12
அரச உளவுத்துறையின் முன்னாள் பிரதானியும் தற்போதைய கிழக்கு சிரேஷ்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தனவிடம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவு, நீண்ட வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளது. ஏப்ரல்21 தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்க முன்னர், அதன் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகி வாக்கு மூலம் வழங்க வேண்டும். இந் நிலையிலேயே நிலந்த ஜயவர்தன இவ்வாறு வாக்குமூலம் வழங்கி வருகின்றார். 16 நாள்களாக பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வாக்குமூலம் 152 மணி நேரம் வரை பதிவு செய்யப்பட்டதாக குறித்த ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவின் அதிகாரி ஒருவர் கூறினார். நாளொன்றுக்கு எட்டரை முதல் ஒன்பதரை மணி நேரம் வரை, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவிடம் இவ்வாறு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் அடுத்து வரு[illegible]ல நாள்களும் வாக்[illegible]திவு செய்யப் [illegible]ள்ளதாக தகவல்கள் [illegible]ன. (ரி2)

# தேர்தல் கடமைகள் தொடர்பில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜூலை 12
எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு சுகாதார தரப்பினர் மற்றும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் உடனான கலந்துரையாடல்கள் தெரிவத்தாட்சி உத்தியோகத்தரும் மாவட்ட அரசாங்க அதிபருமான க.மகேசன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.தேவநேசன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் என்போர் கலந்து கொண்டிருந்தனர்.
இக் கலந்துரையாடல்களில், வாக்களிக்கும் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களாக பெரும்பாலும் பாடசாலைகளே காணப்படுகின்றமையால் அந்நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள், (கைகழுவுதல், தொற்று நீக்கல், சமூக இடைவெளி பேணல், தளபாட தேவைப்பாடுகள்) பாடசாலைகளைத் தொற்று நீக்கி கையளித்தல் மற்றும் அலுவலர்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் என்பன தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. மேலும் தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் 01.08.2020 கையேற்கப்பட்டு மீண்டும் 06.08.2020 இல் குறித்த பாடசாலை நிர்வாகத்தினரிடம் மீள கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதுடன், வாக்கெடுப்பு நிலையங்களிலும், வாக்கெண்ணும் நிலையங்க ளிலும் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக யாழ்.மாவட்டச் செயலக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## அடைவு நகை மீட்கும் பணியகம்

தங்கத்தின் விலை ஒரு லட்சத்தை தாண்டி செல்லும் நிலையில் வங்கியில் அடைவு வைத்து மீட்க முடியாத உங்கள் நகைகளை இன்றைய விலைப்படி கொள்முதல்செய்கிறோம்.

எமது நம்பிக்கையான நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்

**இல. 14,15, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.**

**077 361 1282, 021 222 3817, 021 222 7125**

## Centre For Holistic Healing

**நிறைவாழ்வு மையம்**

*COUNSELING CENTRE*

**உளவள துணை நிலையம்**

நிறைவாழ்வுமையத்தின் தகுதிவாய்ந்த நன்கு பயிற்றப்பட்ட அனுபவம் வாய்ந்த உளவளதுணையாளர்களால் பின்வரும் தரப்பினருக்கு உளவளதுணை சேவை இடம்பெறுகிறது.

- சிறுவர்கள்
- மாணவர்கள்
- வாலிபர்
- முதியோர்

(ஆண், பெண் இருபாலருக்கும் உரியது)

தொடர்புக்கு:
Dr.தயாளினி தியாகராஜா
Srilanka National Association of Counsellors,
Membership No:2017/216)
T.P:0777370494, 021 222 3382
Jaffna College Undergraduate Department,
464, Hospital Road, Jaffna.

## வாடகைக்கு

யாழ். நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார் பண்ணை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 படுக்கை அறைகள். 2 Hall, Bathroom மாத வாடகை 20 000 ஒரு வருட முற்பணம் தேவை. வாகன தரிப்பிட வசதி உண்டு.

**077 931 1889, 076 883 3713**
(தரகர்கள் தேவையில்லை)
Store ஆகவும் பயன்படுத்தலாம்

## கார் வாகனம் விற்பனைக்கு

NISSAN LEAF 2012 (Electric) வீட்டில் சார்ச் செய்யலாம். சேர்விஸ் தேவையில்லை. சிக்கனமானது. ரூபா.15 இலட்சம் (negotiable)

**தொடர்பு:071 813 6824**

## காணி விற்பனைக்கு

❋கைதடி - கோப்பாய் உடையனார் தேவலவத்தை
பரப்பு:- 7 1/2 ஒரே காணி
பரப்பு:- 5 இருபிரிவாக உள்ளது வீதியோரமாக

❋கைதடி ஏ-9 வீதியில் வடமாகாண சபைக்கு முன்பாக கடலறுப்பிட்டி வயல்காணி
பரப்பு:- 40
தரகர் தேவையில்லை.

**077 589 0195, 077 077 6231**

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்

இலவச கணினி, ஆங்கில வகுப்புக்கள்
பிரிவு 26

க.பொ.த (சா/த). (உ/த) உத்தியோகத்தர் களுக்கான இலவச வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

- **Diploma in English**
- **Diploma in Spoken English**
- **Diploma in ICT/ Ms- Office/ Web Development**

❖பிரிவு 25 மாணவர்கள் 11.07.2020 இல் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம்.
❖**NVQ** தகைமைகளுக்காக விண்ணப்பிக்க முடியும்.

**IPS** பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி.
T.P:- 076 685 2529

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆண் விவாகரத்து
பிறந்த திகதி : 09.01.1979 நட்சத்திரம் : கார்த்திகை - 4 ஆம் பாதம்
சூரியன் / செவ்குற்றம் இல்லை கிரகபாவம்: 72
வேலை - விரிவுரையாளர் இவருக்கு சூரியன்/ செவ்வாய் இல்லாத- விவாகரத்து உள்ள உத்தியோகம் அல்லது நன்கு படித்த பெண் தேவை.

தொடர்பு: **சூரியன் திருமண சேவை**
**561, K.K.S. வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்**

## கிறஷர் விற்பனைக்குண்டு

வவுனியாவில் தற்போது பாவனையிலுள்ள கல் உடைக்கும் இயந்திரத் தொகுதி (கிறஷர் 250 X 400) உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்பு: 077 077 7422**

## பகுதி நேர வேலையாள்கள் தேவை

**கிளிநொச்சியில் உள்ள பிரபல்யமான உணவகம் ஒன்றிற்கு இருப்பு எடுப்பவர் (Stock taking) உடன் தேவை**

- அதிகாலையில் 1½ மணிநேர வேலை
- கவர்ச்சிகரமான சம்பளம்
- காலை 7.30 மணிக்கு வேலை முடியும்
- பரந்தன். கிளிநொச்சியில் இருப்பவர் விரும்பத்தக்கது.

(J.12424) (13.17)

**077 691 5521**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
13 . 09 . 1929

இறைவன் அடியில்
24 . 06 . 2019

**திருமதி நவரட்ணம் செல்வரத்தினம்**

திதி: சப்தமி (12.07.2020)

ஆண்டொன்று போனாலும்
ஆறவில்லை எம் துயர் - அம்மா!
உங்கள் நினைவால் தினமும்
விழிநீர் சொரிகின்றோம் அம்மா!
ஆத்மா இறையடியில் சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

49, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், சகோதரங்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

(CS.32848) (13.17)

## மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 09 . 1924

மறைவு
11 . 07 . 2020

# அப்பாக்குட்டி சுப்பிரமணியம்

( ஓய்வு நிலை அதிபர்)

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி சுப்பிரமணியம் நேற்று (11.07.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகனும். காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பூதப்பிள்ளை தம்பதியரின் மருமகனும். காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும்.காலஞ்சென்ற சசிகலா (சிறப்பர்). திலகராஜ் (ஓய்வுநிலை ப.நோ.கூ.ச.நீர்வேலி). கலாநிதி உதயதாஸ் (அமெரிக்கா). கோசலா (தாதியர் - நோர்வே). கலாநிதி குகதாஸ் (UK), சர்மிலா (UK), சியாமளா (கனடா - ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். நாகேஸ்வரி (ஆசிரியர் - சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை). தயாளினி (அமெரிக்கா). ஜெகதீஸ்வரன் (நோர்வே). வைத்திய கலாநிதி உமா (UK), மதனதீபன் (UK), சித்தீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும். தேவகாந் யதுஷா. பிரகாந். லக்ஷிகா. ஹம்ஷிகா. தனுகன். ரிஷபன். ஹரிஷன். சேயோன். பிரமியா. சௌமியா. நிதுஷன். நிரோஷன். கேஷிகன். சத்வி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சிறுப்பிட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(J.12413) (13.17)

**076 623 3128, 077 195 7971, 077 344 4067**

## மரண அறிவித்தல்



உதிப்பு
25 . 04 . 1959

உதிர்வு
11 . 07 . 2020

**வீரசிங்கம் தெய்வேந்திரம்**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் தெய்வேந்திரம் நேற்று (11.07.2020) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். தவராணியின் அன்புக் கணவரும். நிஷாந்தன். சர்மிலன். நிஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப் படும். நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை.

**AAA Gold Center**
**076 568 4346**

## வீடு வாடகைக்குண்டு

நல்லூர் கோயிலுக்கு மிக அருகில் செட்டித்தெருவில் வீடு (மேல் மாடி) மட்டும் வாடகைக்குண்டு.

**076 683 6340**

## வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில் 3 படுக்கை அறை, இரண்டு குளியல் அறை, சமையல் அறை, கோல் இரண்டுடன் புதிய வீடு வாடகைக்குண்டு.

**076 042 4511**

## ENGLISH CLASSES - KIDS

தரம் - 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கான
Personal and Group Class
தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும்.

(cs.32909) (13.17) **075 693 9235**

## குருப்பட்டாபிஷேக வாழ்த்துக்கள்

Congratulations

**இன்றைய நன்னாளில்**
**நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில்**
**சமய, விஷேட, நிர்வாண தீக்ஷை**
**ஆச்சார்ய அபிஷேகம் காணும்**

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தை சேர்ந்த
**ப்ரம்மஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள்**
**சுப்பிரமணிய சர்மா**
அவர்களது குருத்துவப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

சிரத்தையும், மேதையும், கீர்த்தியும், ஞானமும், வித்தையும், செல்வமும், பலமும், ஆயுளும், தேஜஸும், ஆரோக்கியமும், உயர்நலமும் தரவல்ல மேலான அனுஷ்டான தர்ம நிலையில் வாழ்ந்து செழிக்கவாழ்த்துகின்றோம்.

**ப்ரம்மஸ்ரீ சு.பாலகிருஸ்ண சர்மா**
**பத்மாவதி** தம்பதியினர்

**அட்டகிரி வீதி,**
**நவாலி வடக்கு மானிப்பாய்.**

(CS32910) (13.17)



## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
**இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய**

**077 210 6155    221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## இறையியல் கல்லூரி

**வீட்டிலிருந்து சர்வதேச இறையியல் பட்டத்தை**
**பெறுவதற்கான அரியதொரு சந்தர்ப்பம்**

**♦ Bachelor of Theology ♦ Master of Theology**
**(பாடநெறிகள்)**

தொடர்பு: universitydayspring@gmail.com
**077 836 6407**

(cs.32918) (13.17)

## கனடாவில்

இலங்கை பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2020
பத்திரிகை விளம்பரங்களை விளம்பரப்படுத்துங்கள்.

***மக்களின் விருப்புகளால் வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு செல்ல, கனடாவிலுள்ள உங்கள் உறவினர்களுக்கு உங்கள் இலக்கங்கள் மற்றும் சின்னங்களை விளம்பரப்படுத்துங்கள்.***

- X பத்திரிகை விளம்பரங்கள் /ஆக்கங்கள்
- X Radio/இணைய மற்றும் நேரடி நேர்காணல்கள்
- X வலைதள விளம்பரங்கள்
- X முகநூல் விளம்பரங்கள்
- X செய்தி வெளியீடுகள்
- X மற்றும் ஏனைய சேவைகள்

*மேலதிக விபரங்களுக்கு*
**SL 0777-555-026**

*Canada Uthayan Tamil Newspaper*
4062, Ellesemere Road, Scarborough, ON, MIC 1J2-Canada T: 437-488100 | 6A, Perakumaba Place, Wellawatte, Colombo 6

## விற்பனைக்குண்டு

K.K.S.இல் கடலோர காணி விற்பனைக்குண்டு
காங்கேசன்துறை கீரிமலை வீதியில்
K.K.S சந்திக்கு அருகில் 7 பரப்பு காணி
விற்பனைக்குண்டு. காணியின் பிற்பகுதி
கடலால் சூழப்பட்டது.
(தல்செவன ஹோட்டலுக்கு மிக அருகில்)
ஹோட்டல் அமைப்பதற்கு சிறந்த இடம்.

**077 655 5677**

## அமெரிக்க தூதரக காரியாலயம், கொழும்பு.

### தமிழ் மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் [ஆண் / பெண்]

**இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.**

மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் தொழில்நுட்ப, தொழில் நுட்பம் சாரா உத்தியோகபூர்வ ஆவணங்கள், உத்தியோகபூர்வ உரைகள், செய்திவெளியீடுகள் ஆகியவற்றின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்பினை தொழில் முறைதரத்துடன் வழங்குபவராக இருத்தல் வேண்டும். கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை புரியும் சந்தர்ப்பங்களில் சமகால உரைபெயர்ப்பை வழங்க வேண்டும்.

**வேலைக்குரிய கால அட்டவணை: முழு நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள்.**
மாதாந்த கொடுப்பனவு: 111,819/-

**தேவையான தகைமைகள்:**

1. **கல்வி:** சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி. தொழில் சார் மொழிபெயர்ப்பாளரின் சான்று அவசியம்.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் இரண்டு வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன்.சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது.மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

அல்லது

1. **கல்வி:** சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் மூன்று வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன். சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது. மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னனு பிரதிகளுடன் மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- கல்விச்சான்றிழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- சேவை தொடர்பான / தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு / வேறு ஆவணங்கள்).

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பங்கள் **2020 ஜுலை 24** ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.
தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

உ
கணபதி துணை

## வருடாந்தப் பொதுக்கூட்டம் 2020

*விநாயக அடியார்களே!*

நிகழும் சார்வரி வருடம் ஆடி மாதம் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 26.07.2020 முற்பகல் 10.00 மணிக்கு மேற்படி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் சபைத் தலைவர் திரு.க.கிருபாகரன் தலைமையில் கோயில் மண்டபத்தில் நடைபெறும். தயவு செய்து மகாசபை உறுப்பினரைக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் கொடுக்கும்படி வேண்டுகின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

01. இறைவணக்கம்
02. தலைவர் முன்னுரை
03. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
04. நிர்வாக ஆண்டறிக்கை வாசித்தல்
05. கடந்த கால கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
06. பிரேரணைகள்
07. புதிய விடயங்கள்
08. புதிய நிர்வாக சபை தெரிவு செய்தல்
09. நன்றியுரை

**நீர்வேலி,**
**11.07.2020**

**ச.சந்திரசூடி**
**செயலாளர்**

**முக்கிய குறிப்பு:**
பொதுக்கூட்டத்திற்கு ஏதும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் 20.07.2020ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரேரணைகளை எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப் பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(cs.32949) (13.17)

## இரு சடலங்கள் மீட்பு; சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூலை 12
பெல்மடுல்ல கமேகம தெனவக்க ஆற்றில் இருந்து இருவர் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு நாள்களுக்கு முன்னர் இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன.

காட்டுப் பன்றியை வேட்டையாட நபரொருவரால் வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கிய நிலையில் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மின் வேலியை அமைத்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சாரம் தாக்கிய இருவரும் உயிரிழந்தமையை அடுத்து அவர்களின் சடலங்களை அருகில் இருந்த ஆற்றில் சந்தேகநபர் வீசியுள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)

# எதிர்காலத்தை வளமாக்க எமக்கே வாக்களியுங்கள்!

## வாசுதேவ அணி யாழில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12
எமது மக்களின் எதிர்கால வாழ்வை வளமாக்க எமக்கான ஆதரவை அனைத்து மக்களும் வழங்க வேண்டுமென யாழ்ப்பாணம், தேர்தல் தொகுதியில் களமிறங்கியுள்ள பெண் வேட்பாளர் தீபிகா உமா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சார்பில் யாழ் மாவட்டத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுமுன்தினம் யாழ். நகரில் வெளியிட்டு வைக்கப்பட்டது. விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் நன்கு அறிந்தவர். அவற்றைத் தீர்த்து வைக்கின்ற பல்வேறு பணிகளை தொடர்ச்சியாக ஆற்றி வருகின்றார். ஆகையால் அவரது கட்சியில் இணைந்து எமது மக்களுக்கு எம்மாலான சேவைகளை வழங்குவதற்காகவே இந்தத் தேர்தலில் நாங்கள் களமிறங்கியிருக்கின்றோம். எமது மக்கள் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அந்தப் பிரச்சினைகளுக்கு ஏன தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மிக மிக அவசியமானது. குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட வடக்கு, கிழக்கில் பல ஆயிரக்கணக்கான பெண் தலைமைத்துவக் குடும்பங் கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன. அதே போன்று எமது இளைய சமூகத்தினரும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் பல பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேலும் எமது கலை, கலாசார, பாரம்பரிய, பண்பாட்டு விழுமியங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே எமது சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணவேண்டும். இதற்கு எமது கட்சிக்கு அனைவரும் ஆதரவை வழங்க வேண்டுமென்று கோருகின்றோம் - என்றார். (ப-20)









## வேலையாள்கள் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள Hotel ஒன்றிற்கு Supplier வேலைக்கு ஆள்கள் தேவை. (ஆண்,பெண்) இருபாலாரும்.

**021 222 2054, 077 623 8129**

## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி சிசில் 4 அடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **0777 066 487**

சீனியர் லேன், யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 . 07 . 1944 | 11 . 07 . 2020 |

## சின்னத்தம்பி பேரம்பலம்
## (ஆயுர்வேத வைத்தியர்)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் சில்வாவீதி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பேரம்பலம் (ஆயுர்வேத வைத்தியர்) நேற்று (11.07.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி – நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், பிள்ளையம்மாவின் பாசமிகு கணவரும், ஜானகி, கமலாவதி, புனிதவதி, அமிர்தலிங்கம், இராமமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, குஞ்சாச்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், டட்லிகரனின்(சிட்டு) (லண்டன்) அன்புத் தந்தையும், பத்மாவதியின் (லண்டன்) மாமனாரும், சற்குணவதி, பேரம்பலம், கணபதிப்பிள்ளை, சித்திவிநாயகம்பிள்ளை, பேரம்பலம், தர்மலிங்கம், கனகசபை, கமலாதேவி, யசோதா ஆகியோரின் மைத்துனரும், அன்பு (லண்டன்), அபிஷேக் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது வதிவிடமான சில்வா வீதி வட்டக்கச்சியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**

தொடர்பு :- அமிர்தலிங்கம் 077 4497629
இராமமூர்த்தி 077 7730521, டட்லிகரன் +44 7462228059

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 08 . 1940 | 10 . 07 . 2020 |

## சின்னத்தம்பி மங்கயற்கரசி

அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மங்கயற்கரசி 10.07.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், தெய்வேந்திராசாவின் அன்புத் தாயும், நகுலேஸ்வரியின் அன்பு மருமகளும், யதுசன், கார்த்திகன், சந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.தெய்வேந்திராசா (மகன்)**

## விற்பனைக்கு

நல்ல இனம் ஆடு, மாடு விற்பனைக்குண்டு

தொடர்பு: **077 078 7111**

## வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி (ராஜா cream house) அருகாமையில் சீனியர் லேனில் உள்ள வீட்டில் பாவித்த கட்டில், அலுவலக மேசைகள், குளிர்சாதனப்பெட்டி போன்ற வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 921 3830**

## வேலை ஆள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள Tingering Work Shop இற்கு பெயின்ரிங் வேலைகள், ரிங்கறிங் வேலைகள் , உதவியாளர்கள் தேவை.

076 622 4281 - தர்மிகன்
077 680 5923, 076 9059331 - ரட்ணம்
இல. 534, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## ENGLISH PERSONAL CLASSES
## ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்

அனுபவம்மிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**T.P: 077 658 9443**
யாழ்ப்பாணம்

## தேவை வெல்டர்கள் [Welders]

வத்தளையில் அமைந்துள்ள Ricelon (Pvt) Ltd நிறுவனத்துக்கு திறமையான மற்றும் அனுபவம் உள்ள வெல்டர்கள் (Welders) தேவை. தங்குமிட வசதி மற்றும் உணவு வசதிகள் செய்து தரப்படும். சம்பளம் அனுபவம் மற்றும் தகைமைக்கு அமைய பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Mr.செந்தூரன்
**077 236 5235**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் சுப்பர் மார்க்கட் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. (ஆண்/பெண்)

யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

12.07.2020-17.07.2020 வரை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு: **021 222 4265, 077 555 2142**
**VV Mart No.226, Main street, Jaffna.**

## வியாபார திட்ட அறிக்கை தயாரித்தல்

உங்கள் வருமானந்தரும் சகல தொழில் திட்டங்கள் மற்றும் வங்கியில் கடன் பெறுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய வியாபாரத் திட்ட அறிக்கைகளை 25 வருட அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட வியாபார அபிவிருத்திக்கான மதியுரைஞரால் நியாயமான விலையில் தயாரித்து வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: தெய்வேந்திரன் பாலசுப்பிரமணியம்
**077 605 9601**

## வீடு விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரி வீதிக்கு (College of education road) அருகாமையில் அமைந்துள்ள நான்கு அறைகளுடன் வீடு மற்றும் தோட்டக்கிணறுடன் கூடிய ஒரு ஏக்கர் உறுதிகாணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு. (அரசாங்க உத்தரவாதம் பெற்ற மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்டது).

**070 491 7576**

## கடை வாடகைக்கு உண்டு

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீரகாளியம்மன் கோவிலுக்கு அருகில் (நியு லுக் வியுட்டி பாலருக்கு அருகில்) கடை வாடகைக்கு உண்டு. தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும். தரகர் தேவையில்லை.

**076 497 3040**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ 1969, கடக ராசி, பூசம், NEWZEALAND CITIZEN, DIVORCE, BUSINESS, அழகிய மாப்பிள்ளைக்கு தகுந்த அழகிய ஆங்கிலம் ஓரளவு தெரிந்த யாழ்ப்பா ணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. விவாகரத்து பெற்று பிள்ளைகள் அற்றோரும் பிரச்சினை இல்லை. வரதட்சனை எதிர்பார்க்கப்பட மாட்டாது.

தொடர்பு: **+64211020360**
**Email: kes.aove@jimstrees.co.mz**

## வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கருகாமையில் நீராவியடியில் வீடு மற்றும் அறை வாடகைக்கு உண்டு.

**021 222 3171**
மாலை 2 மணி தொடக்கம் 5 மணி வரை
தரகர் தேவையில்லை

## கட்டடபொருள் விநியோகமும், வீட்டு வேலைகளும்

சகல வித மணல், சல்லிகள், காட்டுகல், வேலி தூண்கள், அரி கற்கள், சீமெந்து, கம்பிகள், ஓடருக்கு வழங்கப்படும், அத்துடன் மின்சார, பிளம்பிங், ஆசாரி, மேசன், வர்ணம் பூசும் வேலைகளும் ஒப்பந்த அடிப்படையில் செய்து தரப்படும்.

**077 728 3811**

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் **ஆய்வுகூடத்திற்கு** வேலையாள்கள் தேவை.


தாதிய உத்தியோகத்தர் (Nursing Staff - Phlebotomist)
அலுவலக சுத்திகரிப்பாளர் (Office Labour)

**077 325 7144**
**077 433 5079**

**ES Printers**
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

# துயர் பகிர்கின்றோம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கதிரியக்க தொழில்நுட்ப வியலாளராக கடமையாற்றும் **சுந்தரலிங்கம் சுதர்சன்** அவர்களின் அன்புத் தந்தை



## சபாரத்தினம் சுந்தரலிங்கம்

(Retired MLT ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்)

கடந்த 10.07.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் (Radiographers)
**யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

**ஈஸ்வரபாதம் சரவணபவன்**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



## பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய தமிழ் உறவுகளே,

தேர்தல் காலம் என்பதால் இதைப் போன்ற பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் தபால் ஊடாக உங்களுக்குக் கிடைத்திருக்கலாம். ஏனைய வேட்பாளர்களாலும் அவை உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம். இந்தக் கடிதத்தையும் அதைப்போன்றதொன்று என்று தூக்கி வீசிவிடாதீர்கள். இயந்திரமயமான வாழ்க்கையோட்டத்தில் எனக்காக, இரண்டு நிமிடங்களை ஒதுக்கி, முடிந்தால் வாசித்துப் பாருங்கள். இது எனது அன்பான கோரிக்கை.

கொரோனாவின் பின்னரான தேர்தல் காலம் என்பது பல முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. வீடு வீடாக வந்து அன்புறவாடுவது என்பது அசாத்தியமான ஒன்றாகிப் போயுள்ள நிலையிலேயே, கடிதம் ஊடாக எனது உறவுகளான உங்களுடன் மனம் திறந்து உரையாடுகின்றேன்.

மூன்றரை தசாப்தங்களாக தாயக மண்ணிலிருந்து தமிழ்த் தேசியத்தின் பாதையில், இன விடுதலைக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தடம் மாறாமல் குரல் கொடுத்துவரும் ஒரேயொரு ஊடகமான உதயன் குழுமத் தலைவர் நான் என்பதை நன்கறிவீர்கள்.

நெடிய ஊடகப் பயணத்தில் உங்களுக்காக நானும், என் ஊடகமும் சந்தித்த இழப்புக்கள் ஏராளம். உயிர்ப்பலிகளும், தாக்குதல்களும், சோதனைகளும், வேதனைகளும், சொத்தழிவுகளும் தாராளம். ஒருமுறை அரச அதிகார வர்க்க ஏவலாளிகளால் எமது ஊடகப் பணியாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட, குருதி தோய்ந்த நாளிலும் கூட, துணிந்து நின்று பத்திரிகையை அடுத்த நாள் பிரசுரித்திருந்தோம்.

அதன் பின்னும் முன்னுமான பல தாக்குதல்களில் எமது ஊடகவியலாளர்கள் பலர், அதிகாரத் தரப்பை எதிர்த்து மக்களுக்கு குரல் கொடுத்தமைக்காக சுட்டுக் கொல்லப்பட்டனர். எமது பிரதம ஆசிரியரைக்கூட விபத்து என்ற போர்வையில் கொலைசெய்யும் முயற்சியிலிருந்து அவர் காயங்களோடு தப்பியிருந்தார். எமது அச்சியந்திரம் எரிக்கப்பட்டது. கைக்குண்டுகள் வீசப்பட்டன. எதற்கும் நாம் தளரவில்லை. அடிமேல் அடியாய் வீழ்ந்தபோதும், நாம் விழவில்லை, இன்னும் உரத்தோடும் திடத்தோடும் தமிழினத்துக்காகக் குரல் கொடுத்தோம். உலகளாவிய ரீதியில் 'துணிச்சலுக்கான பத்திரிகை' என்ற சர்வதேச விருதை எம்மால் பெறமுடிந்தது.

அதன் பின்னர் அரசியல் தளத்திலும் நான் தமிழ் மக்களுக்காகவே களமிறங்கினேன். ஊடகம், அரசியல் என்ற "இரட்டைக் குழல்" துப்பாக்கியாக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, அபிலாஷைகளுக்காக, ஏக்கங்களுக்காக, விடிவுக்காக, அபிவிருத்திக்காக என் குரல் தாயகத்தைத் தாண்டி, நாடாளுமன்றிலும், சர்வதேச ரீதியிலும் ஓங்கி ஒலித்தது.

கடந்த இரண்டு தடவைகள் உங்களின் ஏகோபித்த வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட நான், உங்களின் நம்பிக்கையைப் பொய்ப்பிக்காமல் களத்தில் நின்ற மக்கள் சேவகன் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்களின் நிலங்களை கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஆக்கிரமித்திருந்த படையினருக்கும் அரசுக்கும் எதிராக ஜனநாயகரீதியில் மக்களோடு மக்களாகப் போராடி, அந்த நிலங்களை மீட்பதில் என்னாலான அத்தனை முயற்சிகளையும் செய்திருந்தேன். இதன்போதெல்லாம் பல தடவைகள் என்னைப் படைப்புலனாய்வாளர்கள் தாக்கவும் முயன்றிருந்தனர்.

கிறிஸ்பூதம் என்ற பெயரில் புலனாய்வாளர்களை மக்களிடம் ஏவி, குழப்பத்தை ஏற்படுத்த அரசு முயன்றது. அப்போது மக்களை அந்தக் கிறிஸ்பூதங்களிடம் இருந்து காக்க நள்ளிரவு வேளையிலும் துணிந்து சென்று, படையினரோடு வாதாடி, கிறிஸ்பூதம் என்ற அச்சத்தை இல்லாமல் செய்தேன்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதாகக் கூறி மாணவர் விடுதியைப் படைத்தரப்பு முற்றுகையிட்டபோது, அதனை உடைத்து, துப்பாக்கி முனைகளுக்கு அஞ்சாமல் அந்த இரவு வேளையிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தேன். அடுத்தநாள் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் ஒரு ஜீப்பில் இரகசியமாக கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்த போது, அதனைக் கண்ணுற்று உடனடியாகவே படையினரின் பிடியில் இருந்து அவர்களைக் காப்பாற்றினேன்.

பட்டதாரிகள் தமக்கு அரச வேலை கேட்டு தொடர்ச்சியாகப் போராடியபோது, அவர்களோடு இணைந்து குரல் கொடுத்ததோடு, அரசுக்கு அவர்களது கோரிக்கைகளை முன்வைத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை தொடர்ந்து முயற்சி எடுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதை அவர்கள் அறிவார்கள்.

மக்களின் உரிமைக்காக மட்டுமல்லாது, அவர்களின் பொருளாதார வாழ்வியல் முன்னேற்றத்துக்காகவும் நான் கடந்த காலங்களில் உழைத்தமையால், பல வீதிகள் புதுமெருகு பெற்றன. பாடசாலைகளுக்கும், சனசமூக நிலையங்க ளுக்கும் புதிய கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உரிய வாழிடம் இன்றித் தவித்த குடும்பங்களுக்கு எனது முயற்சியால், வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெற்றன. பல விளையாட்டுக் கழகங்களுக்குத் தேவையான உபகரணங்களும் கொடுக்கப்பட்டன். வாழ்வாதாரத்துக்காக ஏங்கிக்கொண்டிருந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோருக்கு தொழில் முயற்சிகள் வழங்கப்பட்டன. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு கணினிப் பயிற்சிகள் இலவசமாக என்னால் வழங்கப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கென ரூபா 823, 057,905.76 என்னால் ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

உங்களுக்கு இவையெல்லாம் தெரிந்திருக்கலாம். அல்லது தெரியாமலும் போயிருக்கலாம். எம்.பி பதவியிலிருந்த நான் மீண்டும் வேட்பாளராகக் களமிறங்கியிருப்பதால் எனது பதவிக்காலத்தில் என்ன செய்தேன் என்பதைச் சொல்வதுதானே நியாயம். அரச பணியாளர்களான நீங்கள் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் எப்படி பணியாற்றினீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அரசியல்வாதிகளின் கட்சி அலுவலகங்களுக்கு எத்தனை தடவை உங்களை அழைத்து அலைக்கழித்திருப்பார்கள். அவர்களின் அமைப்பாளர்கள் உங்களுக்கு எப்படியெல்லாம் தொந்தரவு கொடுத்திருப்பார்கள். சுதந்திரமாக நீங்கள் பணியாற்ற முடியாது. அந்த அரசியல்வாதிகள் சொல்வதை திரும்பிக் கேள்வி கேட்காமல் செய்யவேண்டும். மக்களுக்காகப் பணியாற்ற நீங்கள் முனைந்திருந்தால் தூக்கிப் பந்தாடப்பட்டிருப்பீர்கள். ஒவ்வொரு நாளும் துன்பத்தில் துவண்டு துவண்டு அரச பணியிடங்களில் பணியாற்றியிருப்பீர்கள்.

ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் அப்படியானதொரு நிலைமை உங்களுக்கு ஏற்படவில்லை. சுதந்திரமாக, சுயாதீனமாக உங்கள் பணிகளைத் திறம்படச் செய்திருந்தீர்கள். அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெருமளவு நிதிகளை நாம் பெற்றுத் தந்தபோது, உங்கள் அர்ப்பணிப்பான சேவையால் ஒரு சத நிதிகூடத் திரும்பாமல் மக்களின் வாழ்வை வளமாக்கினீர்கள். அத்தகைய சுதந்திரமான சூழலில் மீண்டும் நீங்கள் உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் பணியாற்ற வேண்டும்.

அதற்காக மக்களின் உரிமைக்காகவும், நலனுக்காகவும் நாம் இன்னும் ஜனநாயகரீதியாகப் போராட வேண்டியுள்ளது. இப்போதுள்ள சூழலில் அரசியல் ரீதியான பலமே எம் ஜனநாயகப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கக் கூடியது. எந்தளவுக்கு நாம் அதிக ஆசனங்களைப் பெற்று, தமிழ்த் தரப்பின் ஏக பிரதிநிதிகளாகச் செல்கின்றோமோ அந்தளவுக்கு அரசும் மக்கள் நலன்சார்ந்த எம் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் நிலை உருவாகும்.

இனிவரும் காலங்களில் தமிழ் மக்களின் உரிமைக்கான அரசியல்ரீதியான போராட்டத்தைத் தொடர்வதற்கு சமாந்தரமாக மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவுள்ளேன். குறிப்பாக வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பிரதேசங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் அரசபணிக்கு நியமிக்கப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்தல், இளையோருக்கு அவரவர் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்,அரச அலுவலர்களின் நலன்களைப் பேணும் வகையிலான நடவடிக்கைகள் என்பவற்றை இன்னும் தீவிரப்படுத்துவேன்.

என்றும் தடம்மாறாத கொள்கையோடு, தமிழ்த் தேசியத்துக்காகவும், தமிழ் மக்களின் விடிவுக்காகவும் ஜனநாயக ரீதியாகப் போராடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் வரலாற்றுக் கடமை உங்களைச் சார்ந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் என்னுடன் மேலும் 9 சக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எனது தனித்துவமான சேவைகள் தொடரவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், தமிழரின் உரிமைக்கான எனது அரசியல் பாதை தொடர வேண்டும் என்று நீங்கள் கருதினால், என்னை நீங்கள் வெல்ல வைக்கலாம்.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்திவிடாதீர்கள். கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதும், தமிழர்களைப் பலவீனப்படுத்துவதும் ஒன்றே.

அன்புரிமையுடன்

(ஈஸ்வரபாதம் சரவணபவன்)

# கொரோனா 2,468

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 14 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 9 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 468ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 980ஆக உயர்ந்துள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல்

# புலஸ்தினியின் சிறியதந்தை நேற்று சி.ஐ.டியால் கைது!

கொழும்பு, ஜூலை 12

உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரித்துவரும் சி.ஐ.டியினர் மட்டக்களப்பு தோற்றாதீவு பகுதியைச் சேர்ந்த ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சாய்ந்தமருது தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர் என்று சொல்லப்படும் ஸாரா என்றழைக்கப்படும் புலஸ்தினியின் சிறிய தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஸஹ்ரான் குழுவுடன் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# விமலேஸ்வரியிடம் மான நஷ்டமாக ரூ.1,000 கோடி கேட்கிறார் சுமந்திரன்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் செயலாளர் விமலேஸ்வரியிடம் ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன்.

கடனாவில் இருந்து கொடுக்கப்பட்ட 21 கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது என்று அண்மையில் விமலேஸ்வரி கேள்வி எழுப்பியிருந்தார். இது சுமந்திரன் மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது.

இதையடுத்து விமலேஸ்வரி கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவரிடம் இழப்பீடாக ஆயிரம் கோடி ரூபா கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளார் சுமந்திரன். (ம)

## புத்தளத்தில்...

ளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் புத்தளம் மாவட்டப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் தினுஷா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்துக்குட்பட்ட நாத்தான்டியா, ஆராச்சிக்கட்டுவ மற்றும் பல்லம ஆகிய இடங்களிலேயே கொரோனாத் தொற்றுடன் பலர் அடையாளம் காணப்படடுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புடைய 50 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், சிலர் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## இராணுவ...

வித்தார் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளமென்ற் யலேஷொஷி வூலே.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கான எனது பயணம் இடம்பெற்று ஒரு வருடத்தின் பின்னரும், ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற ஆறு மாத காலத்துக்குப் பின்னரும் நான் பயணம் மேற்கொண்டவேளை பார்த்த சூழமைவு தற்போது மாற்றமடைந்துள்ளது. இது குறித்து நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். இலங்கையின் எதிர்காலம் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன்.

நான் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வேளை அரசசார்பற்ற அமைப்புகளின் செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டிலிருந்து வேறு அமைச்சுக்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், கடந்த வருடம் டிசெம்பர் 10ஆம் திகதி அரசசார்பற்ற அமைப்புகளின் செயலகம் மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் வசம் சென்றுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் அரச சார்பற்ற அமைப்புகளுக்கான செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்படாத அரசசார்பற்ற அமைப்புகளை சட்டவிரோதமானவை எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவிக்கவேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த வருடம் பெப்ரவரியில் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான இடமொன்று உருவாக்கப்பட்டதுடன், இதுவே ஆர்ப்பாட்டம் செய்வதற்கான இடமாக அறிவிக்கப்பட்டது. ஏனைய இடங்களில் ஆர்ப்பாட்டம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது, நாளாந்த வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படுவதைக் குறைப்பது ஆகிய காரணங்களைக் காட்டி சில தரப்பினர் இதை வரவேற்றிருக்கலாம். ஆனால், அமைதியாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்வதற்காக அரசையும் பொதுமக்களையும் ஈர்ப்பதற்காகப் பொது இடங்களே பயன்படுத்தப்படுகின்றன. இதன்காரணமாக பேச்சுகள், சகிப்புத்தன்மை, பரந்த மனப்பான்மை போன்றவை உருவாகின்றன.

ஆர்ப்பாட்டங்கள் பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்ற அடிப்படையில் அவற்றைக் கட்டுப்படுத்துவது ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான நோக்கத்துக்கு முரணானது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைக் கண்காணிப்பது, துன்புறுத்துவது, விசாரிப்பது, அச்சுறுத்துவது அதிகரித்துள்ளன என்று எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்குச் சென்று திரும்பிய சிவில் சமூகப் பிரதிநிதிகளை பழிவாங்கப்படும் நடவடிக்கைளும் இடம்பெறுகின்றன.

இலங்கைக்கு கடந்த வருடம் நான் விஜயம் மேற்கொண்டிருந்தவேளை ஜனநாயக மயப்படுத்தல், நல்லாட்சி, போருக்குப் பிந்தைய நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி தொடர்பில் சில முக்கிய விடயங்கள் சாதிக்கப்பட்டிருந்தன. ஆனால், தற்போதைய ஆட்சியில் இந்த விடயங்கள் தொடர்பில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இலங்கையில் முன்னேற்றம் காணப்படவில்லை. சில பகுதிகள் தொடர்ந்தும் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளன. இது மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்குத் தடையாகவுள்ளது-என்றார். (எ-22)

## கந்தகாடு...

பிறிதொரு ஆலோசகருக்கும், அவரது பிள்ளைகள் இருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதையடுத்து 70 சிறுவர்கள் உட்பட 300 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மகிங்யங்கனை, ராஜாங்கனையைச் சேர்ந்தவர்களுக்கே கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அவர்கள் தற்போது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றுள்ள இரு பிள்ளைகளில் மூத்த மகளான 11 வயதுடையவருடன் கல்வி பயின்ற 70 பிள்ளைகள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## முன்னறிவித்தலின்றி...

நாட்டில் மீண்டும் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்த நிலையில், நேற்றுப் பல இடங்களில் மக்கள் பொருட்கள் வாங்க முண்டியடித்துள்ளனர். நாடு மீண்டும் முடக்கப்படலாம் என்ற அச்சத்தாலேயே அவர்கள் பொருள்களை வாங்குவதற்கு முண்டியடித்தனர். இந்தநிலையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்தில் பரவ ஆரம்பித்துள்ள கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறும் அபாயம் இல்லை என்று நான் உறுதிபடக் கூறமாட்டேன். எனவே, நாம் அனைவரும் விழிப்பாக இருந்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் ஆலோசகராகச் செயற்பட்ட மற்றுமொரு அதிகாரிக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இராஜாங்கனைப் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த அதிகாரியின் இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று சனிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 11 மற்றும் ஒன்றரை வயதுடைய பெண் பிள்ளைகளே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, குறித்த பிரதேசத்தை சேர்ந்த 70 சிறுவர்கள் அடங்கலாக 300 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். குறித்த அதிகாரியின் 11 வயதுடைய பெண் கல்வி வகுப்புக்குச் சென்று வந்துள்ளார். அவரது வகுப்பிலுள்ள மாணவர்கள் 70 பேரையும் அவர்களின் வீடுகளில் சுயதனிமைப்படுத் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' - என்றார். (ம-22)

## இரண்டாவது...

கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா வைரஸ் தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் முன்கூட்டியே எச்சரித்திருந்தேன். ஆனால், அவசர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கொரோனா வந்த பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது இரண்டாம் அலை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், தேர்தலை நடத்தி மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறுவதே அரசின் நோக்கமாக இருக்கின்றது. எனவே, வைரஸ் மீண்டும் சமூகததில் பரவும் பட்சத்தில் அதற்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டும்.' -என்றார். (ம-44)

## கந்தகாடு பயிற்று...

போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் பயிற்றுவிப்பாளராகப் பணிபுரிந்தவரே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவரின் மனைவி ஒரு ஆசிரியை என்பதுடன் அவர் கோணபினுவல பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றி வருகின்றார். இதையடுத்து அந்தப் பாடசாலையில் அவருடன் தொடர்புகளைப் பேணிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-22)

## போதையில்...

இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் மதுபோதையில் வீட்டுக்கு வந்து சமையல் பாத்திரங்களை அடித்து உடைத்துள்ளார். பின்னர் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டதுடன், அவரை கத்தி கொண்டு வெட்ட முற்பட் டுள்ளார். கணவனின் நடவடிக்கையால் பயந்த பெண் அயல்வீட்டுக்குச் சென்று ஒழிந்துள்ளார். மனைவியை காணாத நிலையில் கணவன் வேம்பில் ஏறி தூக்கிட்டு உயிரிழந்தார். (ம-25)

## சமுர்த்தி...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தியேட்டர் ஒன்றுக்கு இன்று அழைக்கப்பட்டுள்ளனர்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அந்த அமைச்சரும் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். இந்த நிலையில் தாம் அழைக்கப்பட்டமை தேர்தல் பரப்புரைக்காக இருக்கலாம் என்று சமுர்த்தி அலுவலர்கள் சந்தேகம் விடுத்துள்ளனர். அலுவலர்களின் தனிப்பட்ட அலைபேசிகளுக்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டு இன்று காலை 10 மணியளவில் அமைச்சர் உங்களைச் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது என்று தெரியவருகின்றது. (ம)

## அமிதாப்...

அபிசேக் பச்சனுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதை அமிதாப் பச்சன் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், தான் மேலதிக சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தனது குடும்பம் மற்றும் பணியாளர்களுக்கு கொரோனா பரிசோதனை இடம்பெறுகிறது என்றும் அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு தன்னோடு கடந்த பத்து நாட்களுக்குள் தொடர்பிலிருந்த அனைவரும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். இதையடுத்து இந்தியாவின் பிரமுகர்கள் பலரும் தற்போது அச்சத்தில் உள்ளனர். (ம)

**காணி விற்பனை**

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய் பலாலி வீதி அருகில்
4½ நிலப்பரப்பு பூங்காவுக்கு
அருகில் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

**077 573 6356** (CS 30065) (11.17)

அரச சேவைக்கு மீண்டும் சுயகௌரவம்..

**பாராளுமன்ற தேர்தல் - 2020**
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

**ஐக்கிய மக்கள் சக்தி**



**அன்புக்குரிய தபால் மூல வாக்காளர்களே...**
- சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவானது நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீட்டெடுக்கப்படும்.
- அனைத்து அரச ஊழியருக்கும் காணி மற்றும் வீட்டு உரிமை.
- அரச சேவை பிரச்சனைகளை தீர்க்க அர்ப்பணிக்கப்பட்ட தீர்வு திணைக்களம்.
- அரச சேவைக்கு மீண்டும் சுயகௌரவம்.



**உங்கள் உரிமையை பாதுகாக்க தொலைபேசி சின்னத்திற்கும் எனது இலக்கம் 2 இற்கும் வாக்களியுங்கள்.**

**அ.கிருபாகரன்**
கிருபா லேணர்ஸ் அதிபர்

X 2

**வீடு/காணி தேவை**

அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தால் நல்லூர், திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில், இராசபாதைவீதி, பலாலி வீதி, காங்கேசன்துறைவீதி, போன்ற இடங்களில் வீடு/காணி வாங்கவுள்ளோம்.
விற்க விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**Life Star Real Estate**
**0776224038**

**Photo Copy Paper**
**(போட்டோ கொபி பேப்பர்)**

AVALON PHOTO COPY PAPER | PPC paper | COPY PAPER

**Available in a variety of GSM and Sizes**
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**No:870, K.K.S. Road, Jaffna.**
**Tel: 021 492 7499, 077 9077 521**

**மணி விழா வாழ்த்தும்**
**சேவை நலன் பாராட்டும்**



Best Wishes
ஆசிரியர் செல்வி
**சின்னராசா ரஜனி**
அவர்கள்
(BA , M.A (Tamil), Sp.Tr,
Dip in Sp.Ed, Dip in. Singala
Nicord En Trd )
Best Wishes

**சேவை விபரம்:**

| | | |
|---|---|---|
| கிளி/ பன்னாங்கண்டி H.T.MS | - | 24.11.1989 - 08.03.1993 |
| பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - | 09.03.1993 - 31.12 1994 |
| கிளி பன்னாங் கண்டி H.T.M.S | - | 01.01.1995 - 01.01.2000 |
| யா/ டிறிபேக் கல்லூரி | - | 03.01.2000 - 22.09.2004 |
| யா / மட்டுவில் AMTMS | - | 23.09.2004 - 15.01.2009 |
| யா /நுணாவில் மேற்கு GTMS | - | 16.01.2009 - 03.03. 2015 |
| யா/ மறவன் புலோ சகலகலா வல்லி வித்தியாலயம். | - | 04.03.2015 - 11.07.2020 |

பட்டங்கள் பல பெற்ற பல் துறை நாயகி நீர்
பக்குவமாய் கற்பித்து பல திக்கும் புகழ் கொண்டீர்
தாழையடி துர்க்கையம்மன் அருள் கொண்டு
நீடு நீர் வாழ்ந்திடுவீர். வாழ்க! வாழ்க!

Congratulations Congratulations

**ஆசிரியர் நலனோம்பல் கழகம்**
**யா/ மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், சாவகச்சேரி.**

(615) (13.17)

# ஆளும் கட்சிக்குள் அதிருப்தி; நான் காரணம் இல்லை

## பதில் முதல்வர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

உதயன் பத்திரிகையின் 9ஆம் திகதிய பதிப்பில், 'யாழ்ப்பாண மாநகர சபையின் பதில் முதல்வாரன து.ஈசன் மாநகர சபைக் கட்டளைச் சட்ட விதிமுறைகளுக்கு மாறாக இன்றைய கூட்டத்தைக் கூட்டியுள்ளதால் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு ஆளும் கட்சியினர் தீர்மானித்துள்ளனர்' என்று வெளியான செய்திக்கு 'ஆளும் கட்சிக்குள் அதிருப்தி ஏற்படுவதற்கு நான் காரணம் அல்லன்' என்று தனது தன்னிலை விளக்கத்தைத் தந்துள்ளார் பதில் முதல்வர்.

அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மாநகர சபை நிர்வாகிகள் மீது குறை காண முற்பட்டு என்மீது குற்றம் சுமத்துவது தவறான செயற்பாடு ஆகும். எந்தவொரு மாநகர சபைக்கு கூட்டத்தின்போதும் மாநகர சபையில் அங்கம் வகிக்கம் கட்சி உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் அழைத்து கருத்துப் பரிமாற்றம் செய்வது வழக்கம் இல்லை. உறுப்பினர்கள் விரும்பும் பட்சத்தில் தத்தமது வட்டாரப் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக என்னைச் சந்திக்க வரலாம். கூட்டத்தை கூட்டுவதற்கு அழைப்புவிடுப்பது நிர்வாகமே. இம்மாத கூட்டத்துக்குரிய முன்னறிவித்தல் 6ஆம் திகதியே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் கூட்டத்தை நடத்த முடியும். மேலும் கூட்டத் திகதியில் மாற்றம் நிகழ்வது இதுதான் முதல்முறையல்ல. நல்லூர் உற்சவம் போன்ற முக்கிய தீர்மானங்களை எடுக்க வேண்டி இருந்ததாலும் இந்தக் கூட்டம் நடைபெற்றது - என்றுள்ளது. (ம)

---

### லொக்...

மக்கள் பொருள்கள் வாங்க முண்டியடித்ததைக் காண முடிந்தது. நாடு மீண்டும் முடக்கப்படலாம் என்ற அச்சத்தாலேயே அவர்கள் பொருள்களை வாங்குவதற்கு முண்டியடித்தனர்.

கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அப்போது மக்கள் பொருள்களை வாங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். பொருள்களின் விலைகளும் அதிகரித்திருந்தன.

நேற்று நாட்டில் பெருமளவு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். வைரஸ் தொற்று சமூகத் தொற்றாக மாறும் அபாயம் இல்லை என்று அரசு அறிவித்துள்ளபோதும், மக்கள் அச்சத்தால் பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்ததைக் காண முடிந்தது. (எ-159)

### திருமணம்...

கடமையாற்றிய பெண்ணுடன் காதல் வயப்பட்டார் என்று தெரியவருகின்றது. கொரோனா பெருந்தொற்றை அடுத்து இளைஞன் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். அலைபேசியில் அவரது காதலி தன்னைத் திருமணம் செய்யுமாறு தொடர்ச்சியாகக் கேட்டு வந்துள்ளார். இதையடுத்தே இளைஞன் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-25)

### உங்கள்...

ளைக் கடைப்பிடித்து மிக அவதானமாக இருக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ள கொரோனாவுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும்' இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க.

இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனாவின் அடுத்த தாக்கம் கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்தே ஆரம்பமாகியுள்ளது. இந்தத் தொற்றை சமூகத்துக்குள் பரவ விடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினரும் பாதுகாப்புப் பிரிவினரும் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றனர். பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி எமக்கு ஒத்துழைப்பு வழங்கினால் இந்தத் தொற்றைச் சமூகத்துக்குள் பரவவிடாமல் இலகுவில் கட்டுப்படுத்தி விடலாம். கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்துக்குக் கடந்த 3 வாரங்களுக்குள் கைதிகளைப் பார்வையிட வந்த உறவினர்களும் மற்றும் அங்கு கடமையாற்றும் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரும் கட்டாயத் தனிமைப்படுத்தலில் ஈடுபட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் எடுத்துள்ளனர்.

பொதுமக்கள் ஒவ்வொருவரும் வீடுகளிலிருந்து வெளியில் செல்லும்போது கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். இதை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதே வேளை, வெளியில் அனைவரும் சமூக இடைவெளியைப் பேண வேண்டும்.

கொரோனா அறிகுறி உள்ளவர்கள் உடனே சுகாதாரப் பிரிவினருடன் தொடர்புகொண்டு வைத்தியசாலைகளுக்குச் சென்று பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். தற்போதைய ஆரம்பித்துள்ள கொரோனாத் தொற்றுப் பரவலை விரைவில் கட்டுப்படுத்தி விடுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. ஆனாலும், பொதுமக்கள் ஒவ்வொருவரும் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

சமூகத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகம் அடையாளம் காணப்பட்டால் மட்டுமே குறிப்பிட்ட பிரதேசங்களை முடக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்' - என்றார். (ம-22)

### இராணுவத்திலிருந்து...

செய்யப்பட்டுள்ளார். இந்த இளைஞர் இராணுவத்தில் பணியாற்றி விலகியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தை சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஸ் எனும் சுற்றுச்சூழல் அதிகார சபை உத்தியோகத்தர் மீதே அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர் வழமை போன்று கடந்த புதன்கிழமை காலை கடமைக்கு வந்தபோது, அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் மாவட்ட செயலக வாயிலுக்கு அருகில் வழிமறித்து அவர்மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் கையில் வாள்வெட்டுக் காயத்திற்கு இலக்கான உத்தியோகத்தர் பாதுகாப்புத் தேடி மாவட்டச் செயலகத்துக்குள் ஓடியுள்ளார். தாக்குதல்தாரிகள் இருவர் அவரைப் பின் தொடர்ந்து மாவட்டச் செயலக வளாகத்தினுள் புகுந்தும் தாக்குதல் நடத்தியதுடன், வேறொருவரின் மோட்டார் சைக்கிள் மீதும் தாக்குல் நடத்திச் சேதமாக்கி விட்டு தப்பிச் சென்றனர். தாக்குதலுக்கு இலக்கான உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கையில் சந்தேகநபர்கள் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் நீர்வேலி கரந்தாயில் உள்ள வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

அந்த வீட்டில நடத்தப்பட்ட சோதனையில் கைக்குண்டு ஒன்று, வாள்கள் மூன்று, மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, இராணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார். இவர் இராணுவத்தில் பணியாற்றி விலகியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் நேற்று இரவு யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (எ-20,159)

இந்தியாவில் இருந்து

# இலங்கைக்குள் ஊடுருவிய நால்வர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 12



இந்திய முகாம்களில் தங்கியிருந்து சட்டத்துக்குப் புறம்பான வகையில் இலங்கைக்குள் ஊடுருவிய நான்கு பேர் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நால்வரையும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைப்பதற்கான அனுமதி மல்லாகம் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்பரப்பில் நேற்று கடற்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பி.சி.ஆர் பரிசோதனைகளும் அவர்களிடத்தில் முன்னெடுக்கப் படவுள்ளன. (ம)



# சிங்கப்பூரில் மீண்டும் ஆட்சியைப் பிடித்தது மக்கள் செயல் கட்சி

**சிங்கப்பூர் சிற்றி, ஜூலை 12**
**சிங்கப்பூரில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மக்கள் செயல் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.**

சிங்கப்பூரில் பிரதமர் லீ செய்ன் லூ தலைமையிலான மக்கள் செயல் கட்சியின் ஆட்சிக் காலம் முடிய இன்னும் 10 மாதங்கள் இருக்கும் நிலையில் பிரதமர் லீ முன்னதாகவே பொதுத் தேர்தலை அறிவித்தார். இந்த நிலையில் சிங்கப்பூரில் நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 880 இல் இருந்து 1100 ஆக அதிகரிக்கப்பட்டது. காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை வாக்களிப்பு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. இதில், ஆளும் மக்கள் செயல் கட்சி மொத்தமுள்ள 93 இடங்களில், 83 இடங்களைப் பிடித்து மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்தது. எதிர்க்கட்சியான பாட்டாளிக் கட்சி 10 இடங்களைப் பெற்றது. சிங்கப்பூரில் கடந்த 1959 ஆம் ஆண்டு முதல் மக்கள் செயல் கட்சியின் ஆட்சியே தொடர்வது குறிப்பிடத்தக்கது. (ரி1)



## வலுவான வெற்றியில்லை

### பிரதமர் லீ கூறுகிறார்

தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த சிங்கப்பூர் பிரதமர் லீ செய்ன் லூங், நான் எதிர்பார்த்த அள வுக்கு வலுவான வெற்றி கிடைக்க வில்லை என்றாலும் மக்கள் அளித்துள்ள சிறந்த வெற்றி இது.

61 சதவீத வாக்குகள் என்பது மிகவும் மதிப்புமிக்கது என்று நான் கருதுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

**மணமகள் தேவை**
அரச ஊழியரான 1979ஆம் ஆண்டு பூசம் நட்சத்திரம், 12இல் செவ்வாய், கிரகபாவம்-79 1/4 (மூன்று சுற்று) இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம்.
077 354 5432, 021 222 6479

**முழு நேர, பகுதி நேர வேலைவாய்ப்பு**
87 வருட பாரம்பரிய குழும நிறுவனத்திற்கு வட மாகாணத்தில் பதவி நிலைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.
ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
**விண்ணப்ப முடிவு திகதி :20.07.2020**
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :
இல.JF 1021
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**
மோட்டார் சைக்கிள்
HERO HONDA
SPLENDOR
விற்பனைக்கு உண்டு.
T.P.No: 0777 032 757

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**
5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ் -ரூ.1600/ரூ.1350
ஜேர்மனி -ரூ.1600/ரூ.1350
டென்மார்க -ரூ.1600/ரூ.1350
கொலன்ட் -ரூ.1600/ரூ.1350
பெல்ஜியம் -ரூ.1600/ரூ.1350
இத்தாலி -ரூ.1800/ரூ.1450
லண்டன் -ரூ.1600/ரூ.1250
இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
லண்டன்-1100/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1200/=
கனடா- அமெரிக்கா- 1500/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
976,KKS வீதி யாழ்ப்பாணம் 021 2215656 | குஞ்சர்கடைசந்தி நெல்லியடி 070 330 5500 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

**வேலையாள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் விடுதி ஒன்றுக்கு வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 538 0981

**விற்பனைக்கு**
பாவனையில் உள்ள
A/C 4, Washing Machine,
வேப்பம் கட்டில் 2
விற்பனைக்குண்டு.
TP No:-077 179 2577

**கடை வாடகைக்கு**
நெல்லியடிச் சந்திக்கு அருகில்
இலங்கை வங்கிக்கு
முன்பாக 2 கடைகள்
வாடகைக்குண்டு.
021 226 3208, 077 309 0854

**பணிப்பெண்கள் தேவை**
யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு சமையல் மற்றும் வீட்டு.வேலைகள் செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.
077 734 7578, 077 778 0359

New Batch Start
**Elocution Class**
**British College**
of Higher Studies
021 222 4550, 076 2800 208
Sirampiyady lane,
Stanley road, Jaffna.

**IELTS CLASSES**
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General), A1 UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
*Guarnteed to 7.5 in IELTS Exam
Jaffna College Undergraduate Department
464, Hospital Road, Jaffna.
Please contact:-
Tel: 077 780 3970 / 021 222 3382

## அறிவித்தல்

எமது நிறுவனத்தின் நிர்வாகக்குழுவில் உறுப்பினராக செயற்பட்டு வந்த திரு.இராமநாதன் சாந்தன் என்பவர் அண்மைக் காலமாக எமது நிறுவனத்தின் அனுமதியின்றி நிறுவனத்தின் பெயரால் பாடசாலைகளில் சட்ட விரோத நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளமையால் அவர் 13.06.2020 தொடக்கம் நிர்வாக சபையினால் இடை நிறுத்தப்பட்டுள்ளார் ஆகவே தயவுசெய்து எமது நிறுவனம் சம்பந்தமாக அவருடன் எந்த கொடுப்பனவுகளையோ, தொடர்புகளையோ மேற்கொள்ளவேண்டாமென பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம். அத்தோடு எமது நிறுவனம் சம்பந்தமாக தொடர்புகொள்வதாயின் அலுவலக நேரத்தில் 021 221 5925 தொலைபேசி இலக்கத்திலோ அல்லது நேரடியாகவோ தொடர்புகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகசபை
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
(அறொட்) 47/2 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.